©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 32.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 268A] சென்னை, திங்கட்கிழமை, மே 9, 2022
சித்திரை 26, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

பக்கங்கள்

**சட்டமுன்வடிவுகள்:**

எண். 33/2022–தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 2–22

எண். 34/2022–தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம் .. .. .. 23–68

எண். 35/2022–தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டம். .. .. .. 69–70

எண். 36/2022–தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம். .. 71–72

எண். 37/2022–தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டம். .. 73–74

எண். 38/2022–தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை பகுதி நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலி திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம். .. .. .. .. .. .. .. .. .. .. 75–76

எண். 39/2022–தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டம். .. .. .. .. .. .. .. .. .. .. 77–78

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 9ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/2022**

**மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டம் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

பகுதி—I.

**முன்னுரை.**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பகுதி—II

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

99—A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

2. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதான) 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் 99 ஆம் பிரிவிற்கு பின்பு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:— தமிழ்நாடு சட்டம் IV/1919.

"**99—A. சொத்து வரியினை உயர்த்துதல்.—** மன்றமானது, தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள், சொத்துவரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம்.".

202—B எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டத்தின் 202—A எனும் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது,—

"**202—B. மலக்கசடு அல்லது கழிவுநீர் அகற்றுதலுக்கான இடங்களை அடையாளம் காணுதல்.—(1)** சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியத்தின் மேலாண்மை இயக்குநருடன் கலந்தாலோசித்து, ஆணையரானவர், சரக்குந்துகள் இழுவை வண்டிகள் அல்லது குறிப்பிடப்பட்ட வாகனங்கள் எதனின் மூலமாகவும் மலக்கசடுகள் அல்லது கழிவுநீரினை வெளியேற்றுதலுக்கான அத்தகைய இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் அடையாளம் காணப்பட்ட இடங்களில் வெளியேற்றுவதற்காக மலக்கழிவுகள் மற்றும் கழிவுநீரினை கொண்டு செல்வதற்கு வாகனத்தின் ஓட்டத்திற்கான தகுந்த வழிகளை மேலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(2) மலக்கசடுகள் அல்லது கழிவுநீரைக் கொண்டுசெல்லும் நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்ட வாகனங்கள் எதனின் இயக்கம் மற்றும் ஓட்டம் மற்றும் அதனோடு தொடர்புடைய பிற பொருட்பாடுகள் எதுவும், 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க ஒழுங்குமுறைப்படுத்துதல் வேண்டும்.". தமிழ்நாடு சட்டம் 28/1978.

பகுதி–III.

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

81–B எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

4. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதற்கான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 81–A ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**81–B. சொத்து வரியினை உயர்த்துதல்.–** மன்றமானது, தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள், சொத்து வரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம்.".

VIII–A எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டத்தின் VIII–ஆம் அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"அத்தியாயம்-VIII A.**

**மலக்கசடு மற்றும் கழிவுநீர்.**

**161-A. பொருள் வரையறைகள்.–** இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–

"அகற்றும் வசதி" என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்.

"உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு" என்பது நகராட்சி மற்றும் பேரூராட்சிக்கு தொடர்புடையவற்றில் முறையே, நகராட்சியின் ஆணையர் மற்றும் பேரூராட்சியின் செயல் அலுவலர் என்று பொருள்படும்.

(c) "மலக்கசடு" என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்.

(d) "உரிமதாரர்" என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரும் என்று பொருள்படும்.

(e) "அனுபவத்திலிருப்பவர்" என்பது, நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை அனுபவத்திலிருக்கும் நபர் ஒருவர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தினை உடைமையில் கொண்டுள்ள நபர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(f) "உரிமையாளர்" என்பது, நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை சொந்தமாகக் கொண்டுள்ள நபர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தின் குத்தகைதாரர் ஒருவரை உள்ளடக்கும்;

(g) "கழிவுநீர்" என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்.

மையச்சட்டம் 59/1988.

(h) "குறிப்பிடப்பட்ட வாகனம்" என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும்.

(i) ''பணியாளர்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்.

**161–B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.– (1)** நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்தும் மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்குவதற்காக உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவுசெய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(6) (3) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**161–C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீர் உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.–** நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,–

2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர்த் தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர்த் தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்.

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதிசெய்தல் வேண்டும்;

மையச்சட்டம் 25/2013. (d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டவாறான, கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**161–D. உரிமதாரர்களின் கடமைகள்.–** உரிமதாரர் ஒவ்வொருவரும்,–

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல்.

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும், தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**161-E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை:– (1)** உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,–

(a) மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

(b) உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும்

(c) உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவு நீர் சிதறுதலைத் தடுக்கவும், சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அமைப்பானது வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**161-F. தண்டத்தொகை.-** நபரெவரும், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**161-G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.—** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

வரம்புரையாக, உரிமம் ரத்து செய்யும் ஆணையினை பிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**161-H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.—** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், பேரூராட்சிகளைப் பொறுத்தவரை வட்டாட்சியரின் படிநிலைக்குக் குறையாத வருவாய்த்துறையின் அலுவலர் எவரும் மற்றும் நகராட்சிகளை பொறுத்தவரை நகராட்சி ஆணையரும் அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு,

(a) பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

(b) பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்றும் மற்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 161–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை அல்லது அதற்கான இடைநிகழ்ச் செலவுகளை கழித்த பின்பு, அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**161-I. மேல்முறையீடு.-** (1) 161–G மற்றும் 161–H பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.''.

**பகுதி-IV.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

121–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதற்கான) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 121 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**121–A. சொத்து வரியினை உயர்த்துதல்.–** மன்றமானது, தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள், சொத்துவரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம்.''.

VIII–A எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டத்தின் VIII–ஆம் அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"அத்தியாயம்-VIII A.**

**மலக்கசடு மற்றும் கழிவுநீர்.**

**235–A. பொருள் வரையறைகள்.–** இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–

(a) ''அகற்றும் வசதி'' என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்.

(b) ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' என்பது மதுரை மாநகராட்சி ஆணையர் என்று பொருள்படும்.

(c) ''மலக்கசடு'' என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்.

(d) ''உரிமதாரர்'' என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரும் என்று பொருள்படும்.

(e) ''அனுபவத்திலிருப்பவர்'' என்பது, மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை அனுபவத்திலிருக்கும் நபர் ஒருவர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தினை உடைமையில் கொண்டுள்ள நபர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(f) ''உரிமையாளர்'' என்பது, மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை சொந்தமாகக் கொண்டுள்ள நபர் மற்றும் அத்தகைய கட்டடத்தின் குத்தகைதாரர் ஒருவரை உள்ளடக்கும்;

(g) ''கழிவுநீர்'' என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்.

(h) ''குறிப்பிடப்பட்ட வாகனம்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும். மையச்சட்டம் 59/1988.

(i) ''பணியாளர்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்.

**235-B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.—** (1) நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி மாநகராட்சி எல்லைகளுக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்தும் மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்குவதற்காக உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவு செய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(6) (3) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**235-C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீர் உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.—** மாநகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,—

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர்த்தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர்த்தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்.

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

மையச்சட்டம் 25/2013. (d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டவாறான, கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**235-D. உரிமதாரர்களின் கடமைகள்.-** உரிமதாரர் ஒவ்வொருவரும்,—

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்;

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்;

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்;

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும் தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**235-E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை:— (1)** உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,—

மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும் உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவு நீர் சிதறுதலை தடுக்கவும், சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அமைப்பானது வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் மாநகராட்சி எல்லைகளுக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**235-F. தண்டத்தொகை.-** நபரெவரும், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**235-G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.-** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

வரம்புரையாக, உரிமம் ரத்து செய்யும் ஆணையினை பிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**235-H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.—** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், மாநகராட்சியின் உதவி ஆணையாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரும், அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரடப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு,

பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்றும் மற்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 235–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை அல்லது அதற்கான இடைநிகழ்ச் செலவுகளை கழித்த பின்பு, அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**235-I. மேல்முறையீடு.–** (1) 235–G மற்றும் 235–H பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.''.

**பகுதி-V.**

**1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 25/1981.

122–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

8. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதற்கான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 122 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**122–A. சொத்து வரியினை உயர்த்துதல்.–** மன்றமானது, தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள், சொத்து வரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தலாம்.''.

VIII–A எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

9. முதன்மைச் சட்டத்தின் VIII–ஆம் அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"அத்தியாயம்-VIII A.**

**மலக்கசடு மற்றும் கழிவுநீர்.**

**235-A.பொருள் வரையறைகள்.-** இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–

(a) ''அகற்றும் வசதி'' என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்.

(b) ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' என்பது கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் என்று பொருள்படும்.

(c) ''மலக்கசடு'' என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்.

(d) ''உரிமதாரர்'' என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரும் என்று பொருள்படும்.

(e) ''அனுபவத்திலிருப்பவர்'' என்பது, மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை அனுபவத்திலிருக்கும் நபர் ஒருவர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தினை உடைமையில் கொண்டுள்ள நபர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(f) ''உரிமையாளர்'' என்பது, மாநகராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை சொந்தமாகக் கொண்டுள்ள நபர் மற்றும் அத்தகைய கட்டடத்தின் குத்தகைதாரர் ஒருவரை உள்ளடக்கும்;

(g) ''கழிவுநீர்'' என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்.

(h) ''குறிப்பிடப்பட்ட வாகனம்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும். மையச்சட்டம் 59/1988

(i) ''பணியாளர்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்.

**235–B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.–** (1) நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி மாநகராட்சி எல்லைகளுக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்தும் மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்குவதற்காக உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவு செய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

6) (3) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**235-C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீர் உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.-** மாநகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,—

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர்த் தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர்த்தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்.

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

மையச்சட்டம் 25/2013. (d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டவாறான, கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**235-D. உரிமதாரர்களின் கடமைகள்.-** உரிமதாரர் ஒவ்வொருவரும்,—

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல்;

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்;

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும், தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**235-E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை:—** (1) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,—

மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும்உ ரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவு நீர் சிதறுதலை தடுக்கவும், சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அமைப்பானது வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் மாநகராட்சி எல்லைகளுக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**235-F. தண்டத்தொகை.-** நபரெவரும், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**235-G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.-** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

வரம்புரையாக, உரிமம் ரத்து செய்யும் ஆணைபிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**235—H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.—** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், மாநகராட்சியின் உதவி ஆணையாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரும், அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு, பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்றும் மற்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(3) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 235–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை அல்லது அதற்கான இடைநிகழ்ச் செலவுகளை கழித்த பின்பு, அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**235–I. மேல்முறையீடு.–** (1) 235–G மற்றும் 235–H பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.".

**பகுதி-VI.**

**1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 28/1978.

VI–A எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

10. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதற்கான) 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தின் VI ஆம் அத்தியாயத்திற்குப் பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"அத்தியாயம்-VI A.**

**மலக்கசடு மற்றும் கழிவுநீர்.**

69–A. பொருள் வரையறைகள்.– இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–

(a) ''அகற்றும் வசதி'' என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்.

(b) ''உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு'' என்பது மேலாண்மை இயக்குநர் என்று பொருள்படும்.

(c) ''மலக்கசடு'' என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்.

(d) ''உரிமதாரர்'' என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரும் என்று பொருள்படும்.

(e) ''கழிவுநீர்'' என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்.

மையச்சட்டம் 59/1988. (f) ''குறிப்பிடப்பட்ட வாகனம்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அவ்வப்போது ஒப்புதலலிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும்.

(g) ''பணியாளர்'' என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்.

**69-B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.–** (1) நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி சென்னை பெருநகர் பகுதிக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்தும் மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்குவதற்காக உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவு செய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3) ஆம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(6) (3) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**69-C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீர் உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.-** சென்னை பெருநகர் பகுதிக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,—

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர் தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர் தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்.

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

மையச்சட்டம் 25/2013. (d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டவாறான கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**69-D. உரிமதாரர்களின் கடமைகள்.-** உரிமதாரர் ஒவ்வொருவரும்,—

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும் வரையறைகளையும் பின்பற்றுதல்;

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்;

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்;

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும், தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**69-E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை.—** (1) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,—

(a) மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

(b) உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும்

(c) உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறை ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவுநீர் சிதறுதலை தடுக்கவும், சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அமைப்பானது வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் சென்னை பெருநகர் பகுதிக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**69-F. தண்டத்தொகை.-** நபரெவரும் இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**69-G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.-** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

வரம்புரையாக, உரிமம் ரத்து செய்யும் ஆணையினை பிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**69-H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.-** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், வாரியத்தின் செயற்பொறியாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரும், அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணையம் ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு,

(a) பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

(b) பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்றும் மற்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 69–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை அல்லது அதற்கான இடைநிகழ்ச் செலவுகளை கழித்த பின்பு, அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**69-I. மேல்முறையீடு.-** (1) 69–G மற்றும் 69–H பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.".

## நோக்கக் காரண விளக்கவுரை

2010 ஆம் ஆண்டில், கழிவுநீர் அகற்றல் அமைப்பு மற்றும் கழிவுநீர் தொட்டிகளில் தொழிலாளர்களின் நுழைவை தடை செய்வதற்கான ஆணைகளை அரசானது வெளியிட்டது மற்றும் நீர்ப்பீச்சும் இயந்திரங்கள், சேற்றுப்படிவினை அகற்றும் இயந்திரங்கள், நடமாடும் இயந்திரக் குழாய்கள் மற்றும் பிற இயந்திரக் கருவிகளை வாங்கியதன் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் பேணுதலின் இயந்திரமயமாக்கத்தை அறிமுகப்படுத்தியது.

2. தமிழ்நாடு (2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி) மக்கள் தொகையில், சுமார் 48.45 விழுக்காட்டளவு மக்கள் நகரப்புறப் பகுதிகளில் வசிக்கின்ற, இந்தியாவிலுள்ள மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களுடன் ஒன்றாக இருக்கிறது. கழிவுநீர் மேலாண்மையைப் பொறுத்தவரை, சிறந்த சுகாதார வசதிகளை வழங்குவதற்காக உள்ளாட்சி அமைப்புகளில் நிலத்தடி கழிவுநீர் அகற்றத் திட்டம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்களில் செயல்படுத்துதலுக்கு, தமிழ்நாடு அதிக முன்னுரிமை அளித்துள்ளது.

3. திறந்த வெளியில் மற்றும் நீர்நிலைகளில் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை பாகுபாடின்றி வெளியேற்றுதல், சுற்றுச்சூழலுக்கு பெரிய பாதிப்பினை ஏற்படுத்துகிறது. எனவே, மலக்கசடுகள் மற்றும் கழிவு நீரின் பாதுகாப்பான வெளியேற்றுதலை உறுதி செய்வதற்கு, சரக்குந்துகள், இழுவை வண்டிகள் அல்லது கழிவுநீர் தொட்டிகள் மற்றும் கழிவுநீர் குளங்களின் வெளியேற்றுதலுக்காக, பயன்படும் பிற வாகனங்கள் எதனின் இயக்கம் மற்றும் போக்குவரத்தினை ஒழுங்குமுறைப்படுத்துதல் தவிர்க்க முடியாததாகும்.

4. சிறிய மாநகரங்கள் மற்றும் நகரங்கள் மற்றும் பெருநகர வளர்ச்சிகளுக்கான ஒரு சாத்தியமான சுகாதார முறையாக மலக்கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மையின், முக்கியத்துவத்தை (FSSM) அரசானது அங்கீகரித்துள்ளது. மலக்கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மையில் தேசிய கொள்கைக்கு இணங்கிய வகையில், உள்ளாட்சி அமைப்புகளில் முழுசுழற்சி துப்புரவை வழங்குவதற்காக, கழிவுநீர் தொட்டிகளை காலமுறையில் சுத்தம் செய்தல் மற்றும் மலக்கசடுகள் மற்றும் கழிவு நீரை கொண்டுசெல்லுதல், சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு விரிவான செயல்திட்டமானது வகுக்கப்பட்டுள்ளது.

5. ஆண்டுதோறும் சொத்து வரியினை உயர்த்துவதற்கு நகராட்சி மன்றங்களானது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசானது, முடிவு செய்துள்ளது.

6. கூறப்பட்ட சூழ்நிலைகளில், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளை நிருவகிக்கும் சட்டங்கள் மற்றும் 1978 ஆம் ஆண்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 28/1978) மேற்சொன்ன நோக்கத்திற்காக திருத்தம் செய்வதென அரசானது தற்போது முடிவு செய்துள்ளது.

7. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்டமுன்வடிவின் அனைத்து கூறுகளில், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அறிவிக்கைகள் அல்லது ஆணைகளை பிறப்பிப்பதற்கோ அல்லது நேர்விற்கேற்ப விதிகளை செய்வதற்கோ அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மைவாய்ந்தவை அல்ல.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 9.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022ஆம் ஆண்டு மே திங்கள் 9ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/2022**

**1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கும் நடைமுறைக்கு மீண்டும் கொண்டு வருவதற்குமானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

(2) மாநில அரசானது அறிவிக்கையின் மூலம் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1999. 2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான), 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (2) ஆம் பிரிவில், 2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (6), (7), (11), (13) மற்றும் (33) ஆம் கூறுகளில், ‘‘நகராட்சி’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘நகராட்சி மன்றம்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (9) ஆம் கூறில், (a) உட்கூறிற்கு பின்வரும் உட்கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘(a) 2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மையச்சட்டம் 18/2013), 2 ஆம் பிரிவின் (42) ஆம் கூறின் பொருளின்படியான அயல்நாட்டு நிறுமம் உட்பட அந்தச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான நிறுமம் எதுவும் என்றோ;’’;

(3) (19) ஆம் கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது,—

‘‘(19) ‘‘நகராட்சி’’ என்பது அதன் இலக்கண வேறுபாட்டுடன், இச்சட்டத்தின்படி, அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும் மாநகராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது பேரூராட்சி என்று பொருள்படும்;’’.

(4) (28) ஆம் கூறிற்குப் பிறகு பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘(28–A)’’ ‘‘வகுத்துரைக்கப்பட்டது’’ என்பது இந்த சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள்.

3. முதன்மைச் சட்டத்தின் (3) ஆம் பிரிவில்,— 3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில்,—

(a) (a) கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

‘‘(a) ‘‘பேரூராட்சி’’, ஒரு நிலை மாறுபாட்டுப் பகுதி, அதாவது, ஒரு கிராமப்புறப் பகுதியிலிருந்து, நகர்ப்புறப் பகுதிக்கு நிலை மாறும் ஒரு பகுதியில் மக்கட்தொகை பத்து ஆயிரத்திற்கு குறைவில்லாமல் இருப்பதாக மதிப்பிடப்படுகின்றவிடத்தும் அந்தப் பரப்பிடத்தின் ஆண்டு வருமானம் முப்பது இலட்சம் ரூபாய்க்கு குறையாமல் இருக்குமிடத்தும் ஒரு ‘‘பேரூராட்சி’’ என்பதாக;

(b) (b) கூறில் ‘‘நகராட்சி’’, என்ற சொற்றொடருக்காக ‘‘நகராட்சி மன்றம்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(c) (c) கூறில், ‘‘ஐந்து லட்சம்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘மூன்று இலட்சம்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில்,—

(a) (b) கூறில், ‘‘நாற்பத்தைந்து நாட்கள்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘ஆறு வாரங்கள்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (h) கூறிற்கு பிறகு, பின்வரும் கூறுகளானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘(i) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1994) நடைமுறையில் இருக்கும் பரப்பிடம் எதுவும், இந்தச் சட்டத்தின் கீழ் பேரூராட்சியாக அமைத்து உருவாக்கப்பட்டால் அத்தகைய பேரூராட்சியான உள்ளாட்சி பரப்பிடம் அமைத்துருவாக்கப்பட்ட தேதிக்கு உடனடி முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியிலிருக்கும், தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் அத்தகைய பேரூராட்சிகளின் தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்களாக கருதப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) கீழ் அவர்களது பதவிக்காலம் முடிவுறும் தேதி வரையில் பதவியிலிருத்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட கடமைகளை ஆற்றுதலும் மற்றும் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதலும் வேண்டும்;

(j) இந்தச் சட்டத்தின் கீழ் பேரூராட்சி எதுவும் நகராட்சி மன்றமாக அமைத்துருவாக்கப்பட்டால் அல்லது நகராட்சி மன்றம் எதுவும் மாநகராட்சியாக அமைத்துருவாக்கப்பட்டால், இந்தச் சட்டத்தின் கீழ் அத்தகைய நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சி அமைத்துருவாக்கப்பட்ட தேதிக்கு உடனடி முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியிலிருக்கும், அத்தகைய பேரூராட்சி அல்லது நகராட்சி மன்றத்தின் தலைமையாளர், துணைத்தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள், அத்தகைய நகராட்சி மன்றத்தின் தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்களாக கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களது பதவிக்காலம் முடிவுறும் தேதி வரையில் பதவியிலிருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட கடமைகளை ஆற்றுதலும் மற்றும் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதலும் வேண்டும்;

(k) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1994) நடைமுறையில் இருக்கும் பரப்பிடம் எதுவும், நேர்விற்கேற்ப பேரூராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டால், நேர்விற்கேற்ப பேரூராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சியில் இணைக்கப்பட்ட தேதிக்கு உடனடி முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியிலிருக்கும், அத்தகைய உள்ளாட்சிப் பரப்பிடங்களின் தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) கீழ் அவர்களது பதவிக்காலம் முடிவுறும் தேதி வரையில் பதவியிலிருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய தலைவர், துணைத்தலைவர், மற்றும் உறுப்பினர்கள், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) கீழ் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட கடமைகளை ஆற்றுதலும் மற்றும் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதலும் வேண்டும்;

(l) இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும் பரப்பிடம் எதுவும், பேரூராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சி ஒன்றில் இணைக்கப்பட்டால், நேர்விற்கேற்ப, பேரூராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சியில் இணைக்கப்பட்ட தேதிக்கு உடனடி முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியிலிருக்கும், அத்தகைய உள்ளாட்சிப் பரப்பிடங்களின் தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களது பதவிக்காலம் முடிவுறும் தேதி வரையில் பதவியிலிருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட கடமைகளை ஆற்றுதலும் மற்றும் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதலும் வேண்டும்''

4. முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(1) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின், (தமிழ்நாடு சட்டம் V/1920) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி மன்றங்களானது இந்தச் சட்டத்தின் கீழ் அமைத்துருவாக்கப்பட்டு மற்றும் நிறுவப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும் மற்றும் இதன் மூலம் அந்தந்த தொடர்புடைய பெயர்களால் மற்றும் அந்தந்த தொடர்புடைய பகுதிகளில் நேர்விற்கேற்ப, பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி மன்றங்களாக விளம்புகை செய்யப்படுதல் வேண்டும்.

(1–A) பின்வரும் மாநகராட்சிகள் இந்தச் சட்டத்தின் கீழ் அமைத்துருவாக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும். மற்றும் இதன் மூலம் அந்த தொடர்புடைய பெயர்களால் அந்தந்த பகுதிகளில் உள்ள மாநகராட்சிகளாக விளம்புகை செய்யப்படுதல் வேண்டும், அதாவது.–

(i) 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி;

(ii) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட மதுரை மாநகராட்சி;

(iii) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சி;

(iv) 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாநகராட்சி;

(v) 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட திருநெல்வேலி மாநகராட்சி;

(vi) 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட சேலம் மாநகராட்சி;

(vii) 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட திருப்பூர் மாநகராட்சி;

(viii) 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சி;

(ix) 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட வேலூர் மாநகராட்சி;

(x) 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தூத்துக்குடி மாநகராட்சி;

(xi) 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2013) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தஞ்சாவூர் மாநகராட்சி;

(xii) 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/2013) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட திண்டுக்கல் மாநகராட்சி;

(xiii) 2019 ஆம் ஆண்டு ஒசூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/2019) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஒசூர் மாநகராட்சி;

(xiv) 2019 ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/2019) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சி;

(xv) 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2019) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஆவடி மாநகராட்சி;

(xvi) 2022 ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/2022) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட கடலூர் மாநகராட்சி;

(xvii) 2022 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/2022) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட காஞ்சிபுரம் மாநகராட்சி;

(xviii) 2022 ஆம் ஆண்டு சிவகாசி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/2022) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட சிவகாசி மாநகராட்சி;

(xix) 2022 ஆம் ஆண்டு கரூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/2022) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட கரூர் மாநகராட்சி;

(xx) 2022 ஆம் ஆண்டு தாம்பரம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/2022) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தாம்பரம் மாநகராட்சி;

(xxi) 2022 ஆம் ஆண்டு கும்பகோணம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/2022) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட கும்பகோணம் மாநகராட்சி''.

7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தில் 7 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் ''அதன் தலைமையாளர் தவிர'' எனும் சொற்றொடருக்காக,'' அதன் தலைமையாளர் உட்பட'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

8 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தில் 8 ஆம் பிரிவில்,—

(1) (a) (6) ஆம் உட்பிரிவில், ''ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை'' எனும் சொற்றொடருக்காக,'' பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட தொடர்புடைய புள்ளி விவரங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) அவ்வாறு திருத்தப்பட்டதான (6) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது, சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது.—

''வரம்புரையாக, பேரூராட்சி, நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சியின் வரம்புக்குள் உள்ளடங்களான பகுதி எதையும் பொருத்து, அத்தகைய பகுதிக்கான சிற்றொகுதிகளின் எல்லை நிர்ணயமானது அடுத்த சாதாரண தேர்தலுக்கு முன் முடிக்கப்படுதல் வேண்டும்.''.

(2) அவ்வாறு திருத்தப்பட்ட (6) ஆம் உட்பிரிவிற்கு பிறகு, பின்வரும் உட்பிரிவானது, சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது.—

''(7) இந்த பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு எல்லை நிர்ணய ஆணையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/2017) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டதன்படி, அரசானது, நகராட்சியின் வார்டு எல்லைகளை நிர்ணயம் செய்யலாம்.''.

11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், வரம்புரைகளானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

8. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில்,– 12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ''உறுப்பினர் அல்லது தலைமையாளர்'' எனும் சொற்றொடருக்காக, ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக, அவை காணப்படுகின்ற இடங்களில், ''உறுப்பினர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில், (c) கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(d) அவர் சட்டமன்ற உறுப்பினர் அல்லது நாடாளுமன்றத்தின் எந்த அவையிலும் உறுப்பினராக இருந்தால்.'';

(3) (2) ஆம் உட்பிரிவில், ''ஒப்பந்தம் எதுவும்'' எனும் சொற்றொடருக்காக, ''நடைமுறையிலுள்ள ஒப்பந்தம் எதுவும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (6) ஆம் உட்பிரிவில், (c) கூறில் முதலாம் வரம்புரையில் (iv) ஆம் இனத்திற்காக, அதன் கீழ் உள்ள வரம்புரை தவிர்த்து, பின்வரும் இனமானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

''(iv) சரக்குகள் மற்றும் சேவைகள் எதையும் வழங்குவதற்காக, நகராட்சி ஒப்பந்தம் செய்து கொள்கிற, நிறுவப்பட்ட அல்லது நிறுவப்படாத நிறுமம் அல்லது அமைப்பு.''.

9. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு பிறகு, பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 12–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**''12–A வாக்குப்பதிவு நாளில் பணியாளர் ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்குதல்.–** (1) வணிகம், வர்த்தகம், தொழில்துறை நிறுவனம் எதிலும் அல்லது பிற நிறுவனம் எதிலும் பணிபுரியும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு மன்றத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை உடைய நபர் ஒவ்வொருவருக்கும் வாக்குப்பதிவு நாளில், விடுமுறை அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட விடுமுறையின் காரணமாக அத்தகைய நபர் எவரின் ஊதியத்தில் பிடித்தம் அல்லது குறைப்பு செய்யப்படக்கூடாது மற்றும் அவர் அத்தகைய நாளுக்கு சாதாரணமாக ஊதியம் பெறமாட்டார் என்ற அடிப்படையில் அத்தகைய நபர் பணியமர்த்தப்பட்டால், அவருக்கு விடுமுறை வழங்கப்படாவிட்டால், அவர் வாங்கிய ஊதியம் அத்தகைய ஒரு நாளுக்கு அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவு அல்லது (2) ஆம் உட்பிரிவின் வரம்புரைகளை மீறினால், அத்தகைய வேலை கொடுப்பவர் ஐயாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய அபராதத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(4) அவர் ஈடுபட்டுள்ள பணியினை பொருத்து ஆபத்தையோ அல்லது கணிசமான இழப்பையோ ஏற்படுத்தக்கூடிய எவருக்கும் இந்த பிரிவு பொருந்தாது.''

10. முதன்மை சட்டத்தின் 16 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''இருநூற்று ஐம்பது ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக, ''இரண்டாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 16 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. முதன்மை சட்டத்தின் 19 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''உதவி தேர்தல் அலுவலர்'' எனும் சொற்றொடருக்காக, ''உதவி தேர்தல் அலுவலர் அல்லது மண்டல அலுவலர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 19 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

12. முதன்மை சட்டத்தின் 20 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''இருநூற்று ஐம்பது ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக, ''இரண்டாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 20 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

23 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13.** முதன்மைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''இருநூற்று ஐம்பது ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக, ''இரண்டாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

25 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**14.** முதன்மைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவில், ''வாக்குச்சீட்டு'' எனும் சொற்றொடர் காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ஓரத்தலைப்பு உட்பட, ''வாக்குச்சீட்டு அல்லது வாக்கு இயந்திரம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

புதிதாக 34-A ஆம் பிரிவு உட்புகுத்துதல்.

**15.** முதன்மைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுக்குப் பிறகு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"34–A. சொத்து பற்றிய தகவல்களை வழங்குதல்.–** தலைமையாளர், துணைத் தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் தனது இருக்கையில் அமர்வதற்காக உறுதிமொழி அல்லது உறுதியேற்றல் செய்த நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், பின்வரும் தகவல்களை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் முறையிலும் அளித்தல் வேண்டும்:–

(a) அவர், அவரது மனைவி மற்றும் அவரைச் சார்ந்திருக்கும் குழந்தைகள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாக உரிமையாளர்கள் அல்லது பயனாளிகளாக இருக்கும் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள்;

(b) எந்தவொரு பொது நிதி நிறுவனத்திற்கும் அவரது பொறுப்புகள்; மற்றும்

(c) மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது நகராட்சி எதற்கும் அவரது பொறுப்புகள்.''.

35 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**16.** முதன்மைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் ''அரசு'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

37 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**17.** முதன்மைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவில்,– —

(1) (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளில், ''மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாத'' எனும் சொற்றொடருக்காக, ''ஐம்பது சதவீதத்திற்கு குறையாத'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (6) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

''(6–A) இடஒதுக்கீட்டின் நோக்கத்திற்காக ஒவ்வொரு நகராட்சியிலும், இடங்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் போது, பகுதி எதிலும் பாதிக்கும் குறைவான பகுதிகள் புறக்கணிக்கப்படுதல் வேண்டும் மற்றும் பாதி மற்றும் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகள் ஒன்று என கருதப்படுதல் வேண்டும்.''.

38 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**18.** முதன்மைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவில், (b) கூறில், ''மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாத'' எனும் சொற்றொடருக்காக, ''ஐம்பது சதவீதத்திற்கு குறையாத'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) அவ்வாறு திருத்தப்பட்டதான (1) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவு உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(1–A) இடஒதுக்கீட்டின் நோக்கத்திற்காக மேயர் பதவிகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கும் போது, பகுதி எதிலும் பாதிக்கும் குறைவான பகுதிகள் புறக்கணிக்கப்படுதல் வேண்டும் மற்றும் பாதி மற்றும் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகள் ஒன்று என கருதப்படுதல் வேண்டும்.''.

19. முதன்மைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவில்,– 39 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில், (b) கூறில், ''மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாத'' எனும் சொற்றொடருக்காக, ''ஐம்பது சதவீதத்திற்கு குறையாத'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்:

(2) (2) ஆம் உட்பிரிவில், ''மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாத'' எனும் சொற்றொடருக்காக, ''ஐம்பது சதவீதத்திற்கு குறையாத'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்:

(3) அவ்வாறு திருத்தப்பட்டதான (2) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவு உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(2–A) இடஒதுக்கீட்டின் நோக்கத்திற்காக நகராட்சி மன்றத்தின் தலைமையாளர் பதவிகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கும் போது, பகுதி எதிலும் பாதி மற்றும் பாதிக்கும் குறைவான பகுதிகள் புறக்கணிக்கப்படுதல் வேண்டும் மற்றும் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகள் ஒன்று என கருதப்படுதல் வேண்டும்.''.

(4) (4) ஆம் உட்பிரிவில், (b) கூறில், ''மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாத'' எனும் சொற்றொடருக்காக, ''ஐம்பது சதவீதத்திற்கு குறையாத'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) (5) ஆம் உட்பிரிவில், ''மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாத'' எனும் சொற்றொடருக்காக, ''ஐம்பது சதவீதத்திற்கு குறையாத'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) அவ்வாறு திருத்தப்பட்டதான (5) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவுகள் உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(5–A) இடஒதுக்கீட்டின் நோக்கத்திற்காக பேரூராட்சியின் தலைமையாளர் பதவிகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கும் போது, பகுதி எதிலும் பாதிக்கும் குறைவான பகுதிகள் புறக்கணிக்கப்படுதல் வேண்டும் மற்றும் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகள் ஒன்று என கருதப்படுதல் வேண்டும்.''.

20. முதன்மைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில்,– 40 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(a) (iii) ஆம் கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(iii) நகராட்சிகளுக்கு சொந்தமான நீர்நிலைகளை பாதுகாத்தல்;'';

(b) (iv) ஆம் கூறில், ''மற்றும் வடிகால் திட்டங்கள்'', எனும் சொற்றொடருக்காக, ''வடிகால் திட்டங்கள் மற்றும் கழிவுநீர் மேலாண்மை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (v) மற்றும் (vi) ஆம் கூறிற்காக, பின்வரும் கூறுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

(v) சுற்றித் திரிகிற நாய்களின் கட்டுப்பாடு;

(vi) கொசு உட்பட பூச்சிகளின் கட்டுப்பாடு;

(d) (viii) ஆம் கூறில், ''ஆபத்தான வர்த்தகங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''வர்த்தகங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(e) (xiii) ஆம் கூறில், ''மின்சாரம்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(f) (xix) ஆம் கூறில், ''நீர்மகழிவு மற்றும் நீர்பயன்பாட்டின் மேலாண்மை'' எனும் சொற்றொடரானது கடைசியில் சேர்க்கப்படுதல் வேண்டும்;

(g) (xviii) ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது;–

''(xviii) பொது சந்தைகள், கடைகள், வணிக வளாகங்கள், பேருந்து நிறுத்தங்கள், பேருந்து நிழற்கூறைகள், ஓய்வு விடுதிகள், பொதுக் கழிப்பறைகள் மற்றும் சமுதாய கழிப்பறைகள் ஆகியவற்றை பராமரித்தல்;'';

(h) (xxii) ஆம் கூறில், ''விளம்பர பலகை'' எனும் சொற்றொடருக்காக, ''விளம்பர பலகை, மின்னணு பதாகைகள் மற்றும் பலகைகள்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(i) (xxiv) எனும் கூறுக்காக, பின்வரும் கூறுகளானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(xxiv) கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகளின் அமைப்பு மற்றும் தனியார் கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகளை முறைப்படுத்துதல்;

(xxv) நகராட்சி நிதியத்தின் கீழ் செய்யப்படும் வேலைகளின் தேர்வு மற்றும் ஒப்புதல் மற்றும் குறித்தளிக்கப்பட்ட செயல்திட்டங்களுக்கு நகராட்சி நிதியத்திலிருந்து ஒதுக்கீடு மற்றும் பங்களிப்பு; மற்றும்

(xxvi) அரசால் நகராட்சிகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட பிற கடமைகள் அல்லது செயல்பாடுகள் எதுவும்.'';

(2) (2) ஆம் உட்பிரிவில், (vii) ஆம் கூறில், ''மாற்றுத்திறனாளி மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்'' எனும் சொற்றொடருக்காக, ''தெருவோர வியாபாரிகள் மற்றும் உடல் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3) ஆம் உட்பிரிவில், (vii) ஆம் கூறிற்கு பின்பு, அதன்கீழ் விளக்கம் உள்ளடங்களாக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது;—

''(viii) ஆணையர் தனது பாதுகாப்பில் உள்ள ஆவணம் எதையும் சமர்ப்பித்தல் வேண்டும்.''.

43–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**21.** முதன்மைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

**''43–A. தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் உறுப்பினர் விவாதம் மற்றும் வாக்கெடுப்பில் பங்கேற்பதை தவிர்த்தல்.— (1)** தலைமையாளர் அல்லது துணைத்தலைமையாளர் அல்லது 37 ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின் (ii) மற்றும் (iii) ஆம் கூறுகளில் குறிப்பிடப்பட்ட நபர் எவரும் குறிப்பிடப்பட்ட மன்றம் அல்லது பிற குழு எதனின் பரிசீலனைக்காக வரும் பொருண்மை தொடர்பாக பொது மக்களுக்கு அது பொதுவாக பொருந்துவதைத் தவிர அவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது அவரது பங்குதாரர் மூலம் பணம்சார் நலனை கொண்டிருந்தால், அப்பொருண்மை தொடர்பான விவாதம் எதிலும் பங்கேற்கவோ, வாக்களிக்கவோ கூடாது.

(2) பணம்சார் நலன் எதையும் கொண்டிருப்பதாக நம்பப்படும் மன்ற உறுப்பினர் அல்லது அத்தகைய நபர்கள் பொருட்பாடு எதனின் மீது வாக்களிப்பதையோ அல்லது விவாதத்தில் பங்கேற்பதையோ மன்ற உறுப்பினர் அல்லது அத்தகைய உறுப்பினர்கள் எவரும் தவிர்க்கலாம் அல்லது விவாதத்தின் போது மன்ற உறுப்பினர் அல்லது அத்தகைய நபர் புறக்கணிக்க வேண்டும் என்று தலைமையாளர் கோரலாம்.

(3) அத்தகைய மன்ற உறுப்பினர் அல்லது அத்தகைய நபர்கள் தலைமையாளரின் முடிவிற்கு மறுப்பு கூறலாம். அதன் பின்பு மன்றத்தின் கூட்டத்தில் கேள்வியை எழுப்பலாம் மற்றும் மன்றத்தின் முடிவே இறுதியானதாகும்.

(4) கூட்டத்தில் கலந்து கொண்ட மன்ற உறுப்பினர் அல்லது அத்தகைய நபர்கள் எவராலும் விவாதத்தின் படியான பொருட்பாடு எதிலும் தலைமையாளருக்கு பணம்சார் நலன் ஏதேனும் இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டால், அத்தகைய குற்றச்சாட்டின் பேரில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், விவாதத்தின் போது அவர் கூட்டத்திலிருந்து விடுபடுதல் வேண்டும்.

(5) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மன்ற உறுப்பினர் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மை மீது வாக்களிக்க தகுதியற்றவராவார் மற்றும் தொடர்புடைய தலைமையாளர் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது வாக்களிக்கத் தகுதியற்றவராவார்.

**விளக்கம்.-** இந்தப் பிரிவில், 'தலைமையாளர்', என்பது மன்றக் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கும் துணைத் தலைமையாளர் அல்லது மன்ற உறுப்பினரை உள்ளடக்கும்.''.

22. முதன்மைச் சட்டத்தின் 44 ஆம் பிரிவில்,– 44 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(1) மன்றமானது, ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்கு பின்பு அதன் முதல் கூட்டத்தில் அதன் மன்ற உறுப்பினர்கள் ஒருவரை தலைமையாளராக தேர்ந்தெடுத்தல் வேண்டும்.'';

(2) (2) ஆம் உட்பிரிவானது விட்டு விடப்படுதல் வேண்டும்;

(3) (5) ஆம் உட்பிரிவிற்வாக, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(5) தலைமையாளரானவர், மன்ற உறுப்பினராக இருப்பது அற்றுப்போவதன் பேரில் தனது பதவியை விட்டு வெளியேறியதாக கருதப்படுவார்.''.

23. முதன்மைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவில், (d) கூறில், ''பிற திட்டம்'' எனும் சொற்றொடருக்காக, ''நகராட்சி நிதியிலிருந்து நிதியளிக்கப்பட்ட பிற திட்டங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 45 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

24. முதன்மைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவிற்குப் பிறகு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது– 46–A மற்றும் 46–B எனும் பிரிவுகளை புதியதாக உட்புகுத்துதல்.

**''46–A தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிக்கான மறுத்தகுதி.–** பதவியை விட்டு வெளியேறும் தலைவர் அல்லது துணைத் தலைவர் மறுதேர்தலுக்கு தகுதியுடையவராவார்.

**46–B. தலைவர், துணைத் தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள அனுமதி பெறுதல் வேண்டும்.–** தலைவர், துணைத் தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் பதவியை வகிக்கும் எவரும் அரசின் அனுமதியின்றி, அவரது அலுவல் பொறுப்பில், எந்தவொரு வெளிநாட்டிற்கும் பயணம் மேற்கொள்ளக்கூடாது.

25. முதன்மைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவிற்குப் பிறகு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்துதல் வேண்டும், அதாவது:– 49–A முதல் 49–H பிரிவுகளை புதியதாக உட்புகுத்துதல்

**''49–A. நிலைக்குழுக்களை அமைத்தல்.–** (1) அறிவிப்பில் குறிப்பிடலாகும், அத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும், அத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அல்லது மன்றம் அவர்களுக்கு வழங்கும் அத்தகைய செயல்பாடுகளை புரிவதற்கும், அத்தகைய நிலைக்குழுக்களின் எண்ணிக்கை ஆறுக்கு மேற்படாமல் அரசால் அறிவிக்கையின் மூலம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) நிலைக்குழுவின் அமைப்பு, தலைவர் நியமனம் முறை மற்றும் நிலைக்குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர் பதவிக்காலம் ஆகியவை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் இருத்தல் வேண்டும்.

**49–B. நிலைக்குழுவினால் ஆணையாளருக்கு அதிகாரங்களை வழங்குதல்.–** (1) ஒரு நிலைக்குழுவின் ஒப்புதல், அனுமதி, இசைவு அல்லது உடன்பாட்டிற்கு உட்பட்டு ஆணையர் நடவடிக்கை எடுக்கலாம் என்று இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள நேர்வு எதிலும், அத்தகைய நிலைக்குழு, எழுத்துப்பூர்வமான தீர்மானம் மூலம், அத்தகைய தீர்மானத்தில் குறிப்பிடப்படலாகும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அதன் ஒப்புதல், அனுமதி, இசைவு அல்லது உடன்பாட்டை எதிர்நோக்கி, ஆணையாளர் நடவடிக்கை எடுக்க அனுமதியளிக்கலாம்.

(2) ஆணையாளர், அத்தகைய தீர்மானத்திற்கு இணங்க, ஒரு நிலைக்குழுவின் ஒப்புதல், அனுமதி, இசைவு அல்லது உடன்பாட்டை எதிர்நோக்கி நடவடிக்கை எதையும் எடுக்கும் போதெல்லாம், அவர் அத்தகைய நிலைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் பொருண்மையை தெரிவிக்க வேண்டும்.

**49–C. சிற்றொகுதி சபை அமைத்தல்.–** (1) நகராட்சிப் பகுதியில், சிற்றொகுதி ஒவ்வொன்றுக்கும், சிற்றொகுதி சபை ஒன்று மன்றத்தால் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) சிற்றொகுதி சபை ஒவ்வொன்றும், சிற்றொகுதியினைச் சார்பாற்றம் செய்கின்ற நகராட்சியின் மன்ற உறுப்பினரையும் சிற்றொகுதியின் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்துள்ள நபர்களுக்கிடையேயிருந்து, மன்றத்தால் பெயர் குறித்து நியமனம் செய்யப்படும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான நியமன உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, தகுதிகள் மற்றும் நியமன முறை ஆகியன வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

**49–D. சிற்றொகுதி சபையின் தலைமையாளரின் பதவிக்காலம்.–** (1) நகராட்சி மன்றத்தில் சிற்றொகுதியைச் சார்பாற்றம் செய்கின்ற மன்ற உறுப்பினர் அச்சபையின் தலைமையாளராவார்.

(2) மன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பது அற்றுப் போவதன் பேரில் தலைமையாளர் பதவியை விட்டு உடனே விலகுதல் வேண்டும்.

**49–E. சிற்றொகுதி சபையின் பணிகள் மற்றும் கடமைகள்.–** (1) சிற்றொகுதி சபையின் பணிகள் மற்றும் கடமைகள் மற்றும் அதன் அலுவலை நடத்துவதற்கு அத்தகைய குழுவால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை ஆகியன வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(2) சிற்றொகுதி சபையின் பதவிக்கால அளவானது மன்றத்தின் பதவிக் காலத்திற்குச் சமமான அளவினதாக இருத்தல் வேண்டும்.

**49–F. பகுதி மன்றத்தை அமைத்தல்.–** (1) நகராட்சிப் பகுதியில் சிற்றொகுதியொன்றின் ஒவ்வொரு பகுதிக்கும் பகுதி மன்றம் ஒன்று, மன்றத்தால் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) சிற்றொகுதி, பத்துக்கு மேற்படாத வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான பகுதி மன்றங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பகுதி மன்றமொன்று, புவியியல் ஆட்சி நிலவரைப் பகுதியில் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குச் சாவடிகள் தொடர்பான வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து நபர்களும் சாதாரணமாக குடியிருக்கும் அத்தகைய முழுமையான புவியியல் நிலவரைப் பகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பகுதி மன்றமும், சிற்றொகுதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற நபர்களையும் அப்பகுதியின் வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**49–G. பகுதி மன்றத்தின் தலைமையாளரின் பதவிக்காலம்.–** (1) சிற்றொகுதியின் மன்ற உறுப்பினர், அப்பகுதி மன்றத்தின் தலைமையாளர் மற்றும் கூட்டத்தைக் கூட்டுபவராக இருத்தல் வேண்டும்

(2) பகுதி மன்றத்தின் பதவிக்காலம், மன்றத்தின் பதவிக் காலத்திற்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்.

**49–H. பகுதி மன்றத்தின் பணிகள் மற்றும் கடமைகள்:–** பகுதி மன்றத்தின் பணிகள் மற்றும் கடமைகள் மற்றும் அதன் அலுவலை நடத்துவதற்கு கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை ஆகியன வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.''.

26. முதன்மைச் சட்டத்தின் 50 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிவில் (ii) கூறில், ''தலைமையாளரிடமிருந்து'' எனும் சொற்றொடருக்காக, ''தலைமையாளர் அல்லது ஆணையரிடமிருந்து'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 50 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

27. முதன்மைச் சட்டத்தின் 51 ஆம் பிரிவிற்கு பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :– 51 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

**''51. தலைமையாளர் அல்லது துணைத்தலைமையாளர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம்.—** (1) இந்தப் பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, தலைமையாளர் அல்லது துணைத்தலைமையாளர் மீது நம்பிக்கை இல்லை என்பதை வெளிப்படுத்தும் ஒரு தீர்மானத்தை இதன் பின்பு, குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையுடன் இணங்கி செய்யலாம்.

(2) தீர்மானத்தை உருவாக்குவதற்கான நோக்கத்தின் எழுத்துப்பூர்வ அறிவிப்பு, அரசால் குறிப்பிடப்படும் அத்தகைய படிவத்தில், மன்றத்தின் ஒப்புதலளிக்கப்பட்ட எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாத அத்தகைய எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டு, முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் அறிவிப்பில் கையெழுத்திடும் மன்ற உறுப்பினர்களில் யாரேனும் இருவரால் ஆணையரிடம் நேரில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஆணையர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மிகாமல், அவர் நியமித்த நேரத்தில், தீர்மானத்தின் பரிசீலனைக்காக நகராட்சி அலுவலகத்தில் நடத்தப்படும் ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அவர், மன்ற உறுப்பினர்களுக்கு, அத்தகைய கூட்டத்தின் பதினைந்து நாட்களுக்கு மிகாத இடைமுழுமையான நாட்களையும், அதற்காக நியமிக்கப்பட்ட நேரத்தையும் அறிவித்து அறிவிப்பு வழங்குதல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவின் கீழ் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு ஆணையர் தலைமை தாங்குவார், வேறு எந்த நபரும் அதற்குத் தலைமை தாங்கக் கூடாது. கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட அரை மணி நேரத்திற்குள் ஆணையாளர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கவில்லை என்றால், (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையரால், மன்ற உறுப்பினர்களுக்கு குறிப்பிட்டு அறிவிக்கப்படும் நேரத்திற்கு கூட்டம் ஒத்திவைக்கப்படும்.

(5) ஆணையரால் கூட்டத்திற்குத் தலைமை தாங்க இயலவில்லையெனில், அவர் தனது காரணங்களை எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்த பிறகு, கூட்டத்தை அவர் நிர்ணயிக்கக்கூடிய வேறு நேரத்திற்கு ஒத்திவைக்கலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதி, (3) ஆம் உட்பிரிவின் கீழ் கூட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மேல் இருக்கக்கூடாது. ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரம் குறித்து மன்ற உறுப்பினர்களுக்கு ஏழு இடைமுழுமையான நாட்களுக்கு குறையாத அறிவிப்பானது வழங்கப்படும்.

(6) (4) மற்றும் (5) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளவாறு தவிர, இந்தப் பிரிவின் கீழ் ஒரு தீர்மானத்தை பரிசீலிக்க கூட்டப்பட்ட கூட்டம் ஒன்று எக்காரணத்திற்காகவும் ஒத்திவைக்கப்படுதல் கூடாது.

(7) இந்தப் பிரிவின் கீழ் கூட்டப்பட்ட கூட்டம் தொடங்கியவுடன், ஆணையர், மன்றத்திற்கு, மன்றத்தின் விவாதத்திற்கான தீர்மானத்தை வாசித்து, அதன் மீதான விவாதம் தொடங்கியதாக அறிவித்தல் வேண்டும்.

(8) இந்தப் பிரிவின் கீழ் தீர்மானம் எதனின் மீதான விவாதம் ஒத்திவைக்கப்படுதல் கூடாது.

(9) கூட்டம் தொடங்குவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து இரண்டு மணிநேரம் முடிந்தவுடன் அத்தகைய விவாதம் தானாகவே முடிவடையும். விவாதம் முடிவடைந்ததும் அல்லது மேற்படி இரண்டு மணி நேரம் முடிவடைந்ததும் அது முன்கூட்டியே முடிக்கப்படாவிட்டால், அந்த தீர்மானம் சபையின் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

(10) ஆணையாளர், தீர்மானத்தின் தகுதியைப் பற்றி பேசக்கூடாது, அல்லது அதில் வாக்களிக்க உரிமை இல்லை.

(11) கூட்ட குறிப்பின் நகலுடன், தீர்மானத்தின் நகலும், அதன் மீதான வாக்கெடுப்பின் முடிவும், கூட்டம் முடிவடைந்தவுடன் ஆணையரால் அரசிற்கு அனுப்பப்படும்.

(12) மன்றத்தின் ஒப்புதலளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பங்கிற்குக் குறையாத ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அரசு, அறிவிப்பின் மூலம், நேர்விற்கேற்ப தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளரை நீக்குதல் வேண்டும்.

(13) மேற்கூறியபடி பெரும்பான்மையால் தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டால், அல்லது குறைவெண் இல்லாததால் கூட்டத்தை நடத்த முடியாவிட்டால், அதே தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளர் மீது நம்பிக்கை இல்லை என்பதை வெளிப்படுத்தும் எந்த ஒரு அடுத்த தீர்மானத்தின் அறிவிப்பும், கூட்டத்தின் தேதியிலிருந்து ஓர் ஆண்டு காலாவதியாகும் வரை பெறப்படலாகாது.

(14) இந்தப் பிரிவின் கீழ் தீர்மானத்தின் அறிவிப்பு எதுவும்,—

(i) தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளர் பதவி ஏற்ற ஓர் ஆண்டிற்குள்; அல்லது

(ii) தலைமையாளர் அல்லது துணைத் தலைமையாளரின் பதவிக் காலத்தின் கடைசி ஆண்டில் பெறப்படாது.''.

52 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

28. முதன்மைச் சட்டத்தின் 52 ஆம் பிரிவில், பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**“52. அரசு, மன்ற உறுப்பினர் அல்லது துணைத்தலைமையாளர் அல்லது தலைமையாளரை நீக்குதல்.—** (1) இந்த சட்டத்தின் வகைமுறைகள் அல்லது எந்த ஒரு விதிகள், துணை விதிகள், ஒழுங்குமுறைகள் அல்லது அதன் கீழ் வெளியிடப்பட்ட சட்டப்பூர்வமான ஆணைகளை மனவிருப்பத்தின் பேரில் செயல்படுத்த மறுப்பது அல்லது அவற்றை மீறுவது அல்லது தம்மிடம் உற்றமைந்த அதிகாரம் எதனையும் தவறாக பயன்படுத்துவதாக அரசானது கருதுவதன் பேரில் அறிவிக்கையின் மூலம் மன்ற உறுப்பினர், துணைத் தலைமையாளர் அல்லது தலைமையாளர் எவர் ஒருவரையும் பதவி நீக்கம் செய்யலாம்.

(2) அரசானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள கருதும் நிலையில், அந்த உட்பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவிப்பானது அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான காரணம் அடங்கிய அறிக்கை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதவி நீக்கம் செய்யப்பட்ட மன்ற உறுப்பினர், துணைத் தலைமையாளர் அல்லது தலைமையாளர் எவர் ஒருவரும், வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில் நகராட்சி மன்றத்திற்கான அடுத்த சாதாரண தேர்தலுக்கான அறிவிப்பானது வெளியிடப்படும் நாள் வரை அல்லது அத்தகைய அறிவிக்கையில் குறிப்பிடப்படும் நாள் முதலான ஓராண்டு காலம் நிறைவடையும் வரை, இவற்றில் எது பிந்தையதோ அந்நாள் வரை அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதியை பெற்றிருத்தல் கூடாது.

**29.** 54 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில், தொடர்பான ''மாவட்ட ஆட்சியர் அல்லது இந்திய ஆட்சிப் பணியின் மூத்த அலுவலர்'' எனும் சொற்றொடருக்காக, ''ஆணையர் அல்லது பிற அலுவலர் எவரும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 54 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**30.** முதன்மைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவின் வரம்புரைக்கு பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— 55 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''மேலும் வரம்புரையாக நகராட்சி மன்றம் அல்லது பேரூராட்சி தொடர்பான இந்த பிரிவின்கீழ் அரசின் அதிகாரங்கள் இயக்குநரால் செயல்படுத்தப்படும்.''.

**31.** முதன்மைச் சட்டத்தின் 55ஆம் பிரிவுக்குப் பிறகு, பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— புதிய பிரிவு 55 –A ஐ உட்புகுத்துதல்.

**''55–A. உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பூசல்களை தீர்த்தல்.—** (1) இந்த அல்லது வேறு ஏதேனும் சட்டம் மற்றும் அரசின் விதிகளின் கீழ் ஒரு மன்றத்திற்கு, ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளூர் அதிகாரமைப்புகளுக்கு இடையே எழும் எந்தவொரு பூசல் குறித்து, தொடர்புடைய உள்ளூர் அமைப்புகளால் தங்களுக்குள் சுமுகமாகத் தீர்வு காண இயலவில்லையானால் அரசு பூசலை கருத்தில் கொள்ளலாம், மற்றும்—

(a) அதன் சொந்த விருப்பத்தின் பேரில் அதை முடிவு செய்யலாம்; அல்லது

(b) விசாரணைக்கு அனுப்ப மற்றும் நோக்கத்திற்காக, பிரிவு 41 இன் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுக் குழுவிற்கு அறிக்கை செய்ய.

(2) (1) ஆம் உட்பிரிவின் (b) கூறில் இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மற்றும் அரசு பொருத்தமானதாகக் கருதும் விதத்தில் பூசலை முடிவு செய்தல் வேண்டும்.

(3) இந்த உட்பிரிவு நடைமுறைக்கு வருவதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ கொடுக்கப்பட்ட எந்த முடிவும், உட்பிரிவு (1) இன் கூறு (a) இன் கீழ் அல்லது உட்பிரிவு (2) இன் கீழ், சம்பந்தப்பட்ட உள்ளூர் அமைப்புகளின் நிகழ்வில், அரசால் தங்களுக்குத் தகுந்ததாகக் கருதும் விதத்தில் அவ்வப்போது மாற்றியமைக்கப்படும், மேலும் இந்த உட்பிரிவின் கீழ் அதில் எடுக்கப்பட்ட மாற்றங்களுடனான அத்தகைய முடிவு ஏதேனும் இருந்தால், உள்ளூர் அமைப்புகள் கேட்டுக்கொள்வதன் பேரில் எந்த நேரத்திலும் ரத்து செய்யப்படலாம். அத்தகைய முடிவு அல்லது அதில் ஏதேனும் மாற்றம் அல்லது அதை ரத்து செய்வதானது, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு உள்ளூர் அதிகாரமைப்பை கட்டுப்படுத்தும் மற்றும் எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படாது.

(4) இந்தப் பிரிவின் கீழ் அரசின் அதிகாரங்கள், சம்பந்தப்பட்ட உள்ளூர் அமைப்புகளின் ஒன்று இராணுவ அமைப்போ அல்லது பெரிய துறைமுகத்தின் துறைமுக அமைப்பாகவோ இருந்தால், மத்திய அரசின் ஒப்புதலுடன் மட்டுமே செயல்படுத்தப்படும்.''.

**32.** முதன்மைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவில், (5) ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்; 57 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**33.** முதன்மைச் சட்டத்தின் 61 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில்,— 61 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ''இயக்குநர்'' எனும் சொற்றொடருக்காக, ''பேரூராட்சி மற்றும் நகராட்சி மன்றங்களினை பொருத்து இயக்குநர் மற்றும் மாநகராட்சியினை பொருத்து அரசு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) வரம்புரையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

62 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**34.** முதன்மைச் சட்டத்தின் 62ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(1) (*a*) நகராட்சியினால் நிதி ஆணையத்தின் பரிந்துரைகளிலிருந்து எழும் மானியங்கள் உட்பட வரிகள், கட்டணங்கள் மற்றும் பிற கட்டண தொகைகள், அதிகாரப் பகிர்வு மூலம் பெறப்பட்ட அனைத்து தொகைகளும் ''நகராட்சி நிதியம்'' என்று அழைக்கப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் இதன் கீழ் செய்யப்பட்ட விதிகளுடன் இணங்கி பொருந்துதல் வேண்டும் மற்றும் தீர்வு செய்தல் வேண்டும்;

(*b*) நகராட்சியினால் திட்டங்கள் அல்லது சிறப்புத்திட்டங்களுக்காக பெறப்பட்ட கடன்கள், முதன்மை தொகைகள், பங்களிப்புகள் மற்றும் மானியங்களின் வழியிலான பெறப்பட்ட அனைத்து தொகைகளும் ஒரு திட்டம் அல்லது பணிகளுக்காக ஒதுக்கப்பட்டவை ஒரு சிறப்பு நிதியாக தனி கணக்கில் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

66 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**35.** முதன்மைச் சட்டத்தின் 66 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் பின்வரும் சொற்றொடரானது இறுதியாக சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''திட்டத்தின் வருவாய் உருவாக்கம், நிதி நம்பகத்தன்மை மற்றும் நகராட்சியின் திருப்பிச் செலுத்தும் திறன் ஆகியவற்றிற்கு உட்பட்டது.''.

71ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**36.** முதன்மைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவில், தற்போதுள்ள பிரிவானது, அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு மறு எண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு மறுஎண்ணிடப்பட்ட (i) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(2) வரவு செலவு ஆவணங்கள் ஒப்புதலுக்கு பிறகு நிர்வாக அதிகாரியின் மின்னணு கையொப்பத்துடன் ஒதுக்கப்பட்ட இணையதளங்கள் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். வரவு செலவில் செய்யப்பட்ட ஒதுக்கீடானது ஆண்டின் இறுதியில் காலாவதியாகிவிடும் மற்றும் உபரியானது வைப்புத் தொகை மாற்றப்படவோ அல்லது கணக்கிற்கு வெளியே வைத்திருக்கவோ அல்லது பிற எந்த வகையிலும் ஒதுக்கீடு செய்யவோ கூடாது.

(3) இயக்குநரின் முன் அனுமதியின்றி வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டைவிட அதிகமாகவோ அல்லது நகராட்சியின் வருவாயை விட அதிகமாகவோ செலவழிப்பதற்கு நகராட்சி மன்றமானது ஒப்புதல் அளிக்கக் கூடாது.

73 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**37.** முதன்மைச் சட்டத்தின் 73 ஆம் பிரிவில், (ii) ஆம் கூறிற்கு பின்பு பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:—

''(iii) அரசின் ஒப்புதலுடன் பயன்படுத்தப்படலாகும் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்ட சொத்து எதுவும், அது உருவாக்கப்பட்ட நோக்கத்தை தவிர பிற நோக்கத்திற்காக, அறக்கட்டளையின் நோக்கமானது சாத்தியமற்றதாகவோ இருந்தால்.''.

74 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**38.** முதன்மைச் சட்டத்தின் 74 ஆம் பிரிவில்,—

(1) ஆம் உட்பிரிவில், ''1894 ஆம் ஆண்டில் நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (மையச் சட்டம் 1/1894)'' எனும் சொற்றொடருக்காக, ''2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டத்தில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படை தன்மைக்கான உரிமைச் சட்டமானது (மையச் சட்டம் 30/2013) அல்லது எந்தவொரு மாநிலச் சட்டம்'' எனும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

75—Aஆம் பிரிவினை உட்புகுத்துதல்.

**39.** முதன்மைச் சட்டத்தின் 75ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவு புதிதாக சேர்க்கப்படும், அதாவது:—

**“75–A. வணிகத் திட்டங்களை நிறுவுதல்.–** மன்றத்தில், அரசாங்கத்தின் ஒப்புதலுடன், சொந்தமாகவோ அல்லது பொது அல்லது தனியார் பங்கேற்பு முறையின் மூலமாகவோ, மாவட்ட மையங்கள், சமூகம் உள்ளிட்ட வணிக உள்கட்டமைப்புத் திட்டங்களின் திட்டமிடல், கட்டுமானம், செயல்பாடு, பராமரிப்பு அல்லது மேலாண்மை ஆகியவற்றை மேற்கொள்ளலாம் மற்றும் அருகிலுள்ள வணிக மையங்கள், தொழிற்பேட்டைகள், பேருந்து அல்லது சரக்கு வாகன முனையங்கள் மற்றும் வணிக வளாகங்கள் அல்லது வேறு ஏதேனும் வணிக அல்லது சமூகத் திட்டத்துடன் கூடிய சுற்றுலா விடுதிகள்.''

40. முதன்மைச் சட்டத்தின் 76 ஆம் பிரிவில், ''மற்றும் அத்தகைய பண வரம்பு ஐந்து கோடி ரூபாய்க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்'' எனும் சொற்றொடரானது விட்டு விடப்படுதல் வேண்டும். 76 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

41. முதன்மைச் சட்டத்தின் 78 ஆம் பிரிவில், 78 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (2) ஆம் உட்பிரிவில், வரம்புரைக்காக, பின்வரும் வரம்புரையானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''வரம்புரையானது நகராட்சி எதனின் நிலம் அல்லது கட்டடம் மைய அல்லது மாநில அரசு அல்லது மைய அல்லது மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் எதற்கும், பொது நோக்கம் எதற்காகவும் தேவைப்பட்டால், மன்றமானது அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தை கிரையத்திற்கோ அல்லது குத்தகைக்கோ அனுமதிக்கலாம்.

(a) ''உரிமம்'' எனும் சொற்றொடருக்காக, அது காணப்படுகின்ற இரு இடங்களிலும், ''உரிமம் அல்லது குத்தகை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) ''செலுத்துக் கட்டணம்'' எனும் சொற்றொடருக்காக, அதனை பொருத்த நேர்வில் ''கட்டணம் அல்லது வாடகை செலுத்துதல்''எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

42. முதன்மைச் சட்டத்தின் 80 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், பின்வரும் இனமானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 80 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''(e) நிறுவன வரி.''

43. முதன்மைச் சட்டத்தின் 81ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்கு பின்பு பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:– 81 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''(1–A) வரிகளானது, கட்டடத்தின் மற்றும் அந்தக் கட்டடத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது அதற்கு அருகிலுள்ள மற்றும் அண்டையிலமைந்த நிலத்தின் ஆண்டு மதிப்பின் அடிப்படையில் அரசால் நிர்ணயிக்கப்படலாகும் அடிப்படை வீதங்களுக்குட்பட்டு, மன்றத்தினால் நிர்ணயிக்கப்படலாகும் அத்தகைய விழுக்காட்டளவில் விதிக்கப்படுதல் வேண்டும்.''

(2) (3) ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:–

''(4) மன்றமானது, அரசின் முன் ஒப்பதலளிப்பின்றி, விதிக்கப்பட்ட அத்தகைய வரியின் சொத்துவரி அல்லது வகையம் எதனின் வீதத்தை திருத்துதலோ அல்லது அத்தகைய வரியினை நீக்குதலோ கூடாது.''.

44. முதன்மைச் சட்டத்தின் 82 ஆம் பிரிவில்,– 82 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஆம் உட்பிரிவில் ''கட்டடங்கள் மற்றும் நிலங்கள்'' எனும் சொற்றொடருக்காக ''நிலங்கள், கட்டடங்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் அதன் மீது கட்டப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட சேமிப்பு அமைப்புகள், நிலம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''இருநூற்று ஐம்பது ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக, ''இரண்டாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

83, 84, 85 ஆம் பிரிவுகளுக்கான திருத்தம்.

**45.** முதன்மைச் சட்டத்தின் 83, 84 மற்றும் 85 ஆம் பிரிவுகளுக்காக பின்வரும் பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**"83. சொத்து வரியின் வரிக்கணிப்பு செய்தல் மற்றும் கணக்கிடும் முறை.–** (1) கட்டடத்தின் உரிமையாளர் அத்தகைய இடம் அல்லது வளாகத்தின் உரிமையாளரிடமிருந்து வேறுபட்ட நபராக இல்லாதவிடத்து, ஒவ்வொன்றும் அதன் மற்றும் அதற்கு அண்டையிலுள்ளதாக ஆக்கிரமிக்கப்பட்ட அருகிலுள்ள பிற வளாகங்களுடன் வரிக்கணிப்பு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கட்டடத்திற்கு தனியான வாடகையில் பத்து சதவீதம் கழிக்கப்பட்டு கணக்கிடப்பட்டவாறான ஆண்டுக்கு ஆண்டுக்கான வருடாந்திர வாடகையானது நிலம் மற்றும் கட்டடத்தின் ஆண்டு மதிப்பாக கருதப்படுதல் வேண்டும் மற்றும் அக்கழிவானது, கட்டடத்தின் பழுதுபார்ப்புக்கான அனைத்து கொடுப்பனவுகளுக்குப் பதிலானதாக இருக்கும்:

வரம்புரையாக–

(*a*) ஆணையரின் கருத்துப்படி ஆண்டு மதிப்பு நிர்ணயிக்க இயலாத சாதாரணமாக வாடகைக்கு விடப்படாத ஒரு வகுப்பின் எந்தவொரு வளாகத்தின் ஆண்டு மதிப்பானது, நில மதிப்பின் ஆறு சதவீதம் ஆகும். கட்டடத்தின் கட்டுமானத்திற்கான தற்போதைய செலவு மற்றும் தேய்மானத்திற்கான கழிப்பிற்குப் பிறகு, இது எந்த வகையிலும் பத்து சதவீதத்திற்கும் குறைவாக இருத்தல் கூடாது.

(*b*) ஏதேனும் ஒரு தொழிற்பேட்டையில் உள்ள எந்த கட்டடத்திலும், தண்ணீர் வசதி, வடிகால் மற்றும் விளக்குகள் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகள் நகராட்சியால் வழங்கப்படாமல், அரசாங்கத்தின் தொழில் துறையால் வழங்கப்பட்டால், அதன் மூலதன மதிப்பின் நான்கு சதவீதமானது அத்தகைய கட்டடத்தின் ஆண்டு மதிப்பாகக் கருதப்படும்.

வரம்புரையாக– இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, தொழில் துறை அல்லது மற்ற அதிகாரங்களால் அத்தியாவசிய வசதிகள் வழங்கப்படுகின்றனவா என்ற கேள்வி எழும் நிலையில், அது பரிந்துரைக்கப்படும் அதிகார அமைப்பால் தீர்மானிக்கப்படும்.

விளக்கம்.– இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, 'தொழிற்பேட்டை' என்பது அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட அல்லது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வேறு ஏதேனும் அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட எந்தவொரு பகுதியும், அதில் ஏதேனும் ஒரு தொழில் அல்லது ஒரு வகை தொழில்துறைக்கு இடமளிக்கப்படுகிறது; மற்றும்

(*c*) இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் இந்த பிரிவின் கீழ் மதிப்பீடுகளில் இருந்து விலக்கப்படும்.

(3) (2) ஆம் உட்பிரிவிற்கான காப்புரையின் (*a*) அல்லது (*b*) கூறுகள் பொருந்தாத கட்டடம் அல்லது ஒரு வகையை சார்ந்த கட்டடங்களுக்கான ஆண்டு மதிப்பு தொடர்பாக, அரசானது, எந்த நபர் அல்லது நபர்களால் எத்தகைய இடைவெளிகளில் நிலத்தின் மதிப்பு, கட்டுமானத்திற்கான தற்போதைய செலவினம் மற்றும் தேய்மானத்திற்கான மதிப்பு ஆகியவற்றை நிர்ணயிப்பதற்கான முறை குறித்து விதிகளை செய்வதற்கான அதிகாரத்தை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் அரசானது, அத்தகைய விதிகளின் மூலம் கட்டடம் அல்லது ஒரு வகையை சார்ந்த கட்டடங்களுக்கு வகைமுறைகள் பொருந்துவதை கட்டுப்படுத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(4) இந்தப் பிரிவின்படி கணக்கிடப்பட்ட சொத்து வரி ஒவ்வொரு அரையாண்டுக்கும் செலுத்தப்பட வேண்டும் மற்றும் அரையாண்டு காலத்திற்குள் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் செலுத்தப்பட வேண்டும்.

விளக்கம்.– இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''அரையாண்டு'' என்ற சொற்றொடர், ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் செப்டம்பர் 30 ஆம் தேதி வரையிலும், அக்டோபர் 1 ஆம் தேதி முதல் மார்ச் 31 ஆம் தேதி வரையிலும் இருக்க வேண்டும்:

(5) ஆணையர் கட்டடம் அல்லது நிலத்தின் அனைத்து விவரங்கள் மற்றும் அத்தகைய கட்டடம் அல்லது நிலம் தொடர்பாகச் செலுத்த வேண்டிய சொத்து வரி ஆகியவற்றைக் கொண்ட சொத்து வரி புத்தகத்தை வழங்கலாம்.

(6) (a) விவசாய நோக்கங்களுக்காக தனியாக பயன்படுத்தப்படாத மற்றும் கட்டடங்களால் ஆக்கிரமிக்கப்படாத அல்லது அருகில் உள்ள மற்றும் இணைக்கப்படாத நிலங்களைப் பொருத்தளவில், அந்த நிலங்களுக்கு, அதன் அமைவிடம் மற்றும் சதுரடி ஒன்றுக்கு அரசால் வகுத்துரைக்கப்படலாகும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதத்திற்கு உட்பட்டதான அத்தகைய வீதத்தில் சொத்து வரி விதிக்க வேண்டும்.

(b) நகராட்சி எல்லைக்குள் கட்டடத்துடன் கூடிய நிலம் ஏதேனும் இருந்தால், மற்றும் காலியாக உள்ள நிலத்தின் பரப்பளவு கட்டடத்தின் மொத்த பரப்பளவை விட இரு மடங்கு அதிகமாக இருப்பின், ஆணையர், காலி நிலத்தின் சொத்து வரியை நிர்ணயிக்க வேண்டும்.

**84. சொத்து வரி செலுத்துவதற்கான ஊக்கத்தொகை மற்றும் அபராதம்.—** (1) அரையாண்டு தொடங்கிய நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் சொத்து வரியைச் செலுத்தியவருக்கு, அவரால் செலுத்தப்பட வேண்டிய நிகர சொத்து வரியின், அதிகபட்சம் ஐந்தாயிரம் ரூபாய்க்கு உட்பட்டு ஐந்து சதவீதம் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

(2) ஒரு அரையாண்டு முடிந்த பிறகும், ஏதேனும் சொத்து வரி செலுத்தப்படாமல் இருந்தால், உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டிய தொகைக்கு கூடுதலாக, சாதாரண வட்டி முறையில் ஒரு சதவீதத்திற்கு மிகாத அத்தகைய வீதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

(3) வரிவிதிப்பு மேல்முறையீட்டுக் குழு அல்லது மதிப்பீட்டாளரால் விருப்பப்பட்ட மேல்முறையீட்டில் ஏதேனும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில் நகராட்சிக்கு நிலுவைத் தொகை செலுத்த வேண்டியிருந்தால், மதிப்பீட்டாளர் குறிப்பிட்ட தொகையை ஒரு சதவீதத்துடன் செலுத்த வேண்டும். ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டிய தேதியிலிருந்து மாதம் ஒன்றிற்கு எளிய வட்டி செலுத்துதல் வேண்டும்.''.

46. முதன்மைச் சட்டத்தின் 86 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:— புதிதாக 86—A ஆம் பிரிவினை உட்புகுத்துதல்.

**86—A. சொத்து வரியினை உயர்த்துதல்.—** மன்றத்தால், தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது, அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும், குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குள் சொத்து வரியினை அத்தகைய வீதத்தில் உயர்த்தப்படுதல் வேண்டும்.

47. முதன்மைச் சட்டத்தின் 87 ஆம் பிரிவில், (1) (c) ஆம் கூறுக்காக பின்வரும் கூறானது மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 87 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(c) மைய அல்லது மாநில அரசு அல்லது நகராட்சி அல்லது அரசின் உதவி பெறும் நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள் மற்றும் நூலகம் உள்ளடங்கலாக கல்வியியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும், மன்றத்தினால் ஏற்பளிக்கப்பட்ட கட்டடங்கள்:

வரம்புரையாக, சுயநிதி படிப்புகள் நடத்துவதற்காக அரசு உதவி பெறும் நிலையங்களால் கல்வியியல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் கட்டடங்கள், சொத்துவரி விதித்தலுக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) (e) கூறிற்கு, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல், வேண்டும், அதாவது:—

''(e) அறம்சார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிலையங்கள் இதன் பொருட்டு அரசால் வகுத்துரைக்கப்படலாகும் வழிகாட்டுதல்களுக்குட்பட்டு, ஆனால் அவற்றுடன் இணைந்த குடியிருப்பு கட்டடங்கள் உள்ளடக்கப்படவில்லை.''.

புதிதான 91–A எனும் பிரிவினை உட்புகுத்துதல்.

48. முதன்மைச் சட்டத்தின் 91 ஆம் பிரிவிற்கு பின்பு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**91–A நிறுவன வரியினை விதித்தல் மற்றும் வசூலித்தல்.–** மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறான அரையாண்டிற்கு ஒருமுறை பத்தாயிரம் ரூபாய்க்கு மிகாத வீதத்தில் நிறுவன வரியை மன்றமானது விதிக்கலாம் மற்றும் வகுத்துரைப்படலாகும் அத்தகைய முறையில் அத்தகைய வரியினை வசூலிக்கலாம்.

92, 93 மற்றும் 94ஆம் பிரிவுகளை விட்டு விடுதல்.

49. 92, 93 மற்றும் 94 ஆம் பிரிவுகளானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

98ஆம் பிரிவிற்கான திருத்தம்.

50. முதன்மைச் சட்டத்தின் 98 ஆம் பிரிவில், ''ஆறு மாதங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''இரண்டு ஆண்டுகள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்,

100 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

51. முதன்மைச் சட்டத்தின் 100 ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(a) (ii) ஆம் கூறில், ''நகராட்சி'' எனும் சொற்றொடருக்காக, ''நகராட்சி மன்றம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) (ii) ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

(iii) மாநகராட்சி ஒவ்வொன்றுக்காக, மறுவிதிப்பு மேல்முறையீட்டு குழுவின் தலைவராக இருக்கும் மன்றத்தின் தலைவர் மற்றும் ஒன்பது உறுப்பினர்கள், அரசால் அறிவிக்கப்படும் ஒன்பது அலுவலர்களுடன் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்;

(c) வரம்புரையில் ''அல்லது நகராட்சி'' எனும் சொற்றொடருக்காக, ''நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (3) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரைகளானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''வரம்புரையாக, 2022ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத்தேதியன்றும் அது முதற்கொண்டும், 1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) கீழ் அமைந்துருவாக்கப்பட்ட வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முன்பு கூறப்பட்ட தேதியில் நிலுவையிலிருக்கும் அனைத்து பொருட்பாடுகள் மற்றும் வழக்குள்ளானவை, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் அல்லது சென்னை மாநகராட்சிப் பகுதியின் மீது நீதிமன்ற ஆள்வரையைக் கொண்டுள்ள முதன்மை மாவட்ட நீதிபதிக்கு மாற்றம் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் அல்லது முதன்மை மாவட்ட நீதிபதி, அத்தகைய பொருட்பாடு அல்லது வழக்குகளை, அது மாற்றம் செய்யப்பட்ட நிலையிலிருந்தோ அல்லது தொடக்க நிலையிலிருந்தோ அல்லது புதிதாகவோ சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் அல்லது முதன்மை மாவட்ட நீதிபதி, ஆகியோருக்கு தக்கதெனக் கருதலாகும் அத்தகையவாறு, நடத்துதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, வரிவிதிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்ட இடைக்கால அல்லது இடைக்கால ஆணை, சென்னை நகர உரிமையியல் நீதிமன்றம் அல்லது முதன்மை மாவட்ட நீதிபதியின் உத்தரவின் மூலம் மாறுபடும் அல்லது மாற்றியமைக்கும் வரை தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும்.'';

(3) (4) ஆம் உட்பிரிவிற்கு, “பேரூராட்சி அல்லது நகராட்சி”, காணப்படுகின்ற இரு இடங்களில் “பேரூராட்சி, நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சி” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்பட வேண்டும்.

52. முதன்மைச் சட்டத்தின் 101 ஆம் பிரிவானது விட்டு விடப்படுதல் வேண்டும். 101 ஆம் பிரிவினை விட்டுவிடுதல்

53. முதன்மைச் சட்டத்தின் 102 ஆம் பிரிவில், (3) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவு மற்றும் விளக்கமானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 102 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(3) அத்தகைய விண்ணப்பத்தினை பெறுவதின் பேரில், விண்ணப்பமானது ஒழுங்கில் இருந்தால் ஆணையாளர் உரிமத்தை வழங்கலாம்;

வரம்புரையாக, ஆணையாளர், தேவையெனக் கருதினால் வணிகம் அல்லது வர்த்தகம் நடைபெறும் இடங்களை ஆய்வு செய்யலாம்;

மேலும் வரம்புரையாக, உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பம் எதுவும், கேட்கப்படுவதற்கான நியாமான வாய்ப்பொன்றை வழங்காமல், மறுக்கப்படுதலாகாது.

மேலும் வரம்புரையாக, விண்ணப்பமானது அதன் பெறப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக தீர்வு செய்யப்படவில்லையெனில், அதன் முடிவில் விண்ணப்பிக்கப்பட்ட உரிமம் ஆனது வழங்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.”.

விளக்கம் – இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக, வணிகம் அல்லது வர்த்தகம் என்பது, அவ்வப்போது, அரசால் அறிவிக்கப்படலாகும், கடை, நிறுவனம், ஆலை, தொழிற்சாலை ஆகியவற்றின் வகையம் எதுவும் என்று பொருள்படும்.”.

54. முதன்மைச் சட்டத்தின் 102ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது.— புதிதாக 102–A ஆம் பிரிவினை உட்புகுத்துதல்.

“102–A **சீரற்ற ஆய்வினை மேற்கொள்வதற்கான அதிகாரம்.—** ஆணையாளர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்திற்காக வணிகம் அல்லது வர்த்தகம் எதனினும் அவ்வப்போது ஆய்வினை மேற்கொள்ளலாம்.”.

55. முதன்மைச் சட்டத்தின் 107ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், “அழிக்கப்பட்டது” எனும் சொற்றொடருக்காக “நீக்கப்பட்டது” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 107 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

56. முதன்மைச் சட்டத்தின் 108 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது,— புதிதாக 108–A ஆம் பிரிவினை உட்புகுத்துதல்.

“**108–A ஸ்பா மற்றும் மசாஜ் நிலையத்திற்கு உரிமம் வழங்குதல்.—**

(1) ஆணையாளரால் வழங்கப்பட்ட உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எந்த ஒரு இடமானது ஸ்பா மற்றும் மசாஜ் நிலையம் எதுவுமாக, பயன்படுத்தலாகாது.

(2) ஸ்பா மற்றும் மசாஜ் நிலையத்தை நடத்துவதற்கு ஆர்வமுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய படிவத்திலும் மற்றும் அத்தகைய கட்டணத்தை செலுத்துவதின் பேரிலும் உரிமத்தினை பெறுவதற்காக ஆணையாளரிடம், விண்ணப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்றினை பெறுவதன் பேரில், ஆணையாளர், ஆணையின் மூலம், அவர் தக்கதென கருதலாகும் அத்தகைய விசாரணையை மேற்கொண்ட பின்பு, உரிமத்தை வழங்கலாம் அல்லது எழுத்துபூர்வமான காரணங்களை பதிவு செய்வதற்காக, கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, அந்த உரிமத்தை வழங்குவதற்கு மறுக்கலாம். அத்தகைய உரிமம், அது வழங்கப்பட்டதற்கான கால அளவிற்கு மிகாமல் ஒரு கால அளவிற்கு புதுப்பிக்கப்படலாம்.”.

114 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

57. முதன்மைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவானது, அந்தப் பிரிவிற்கு (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்பட்ட பின்பு, பின்வரும் பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது.–

"(2) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகளை தொடர்ச்சியாக மீறுகிறார் அல்லது (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஆணையினை கீழ்படியாமல் இருக்கும் நேர்வில், ஆணையாளர், வர்த்தகத்திற்கான வளாகத்தினை பூட்டி, முத்திரையிடலாம் மற்றும் அதற்காக குற்ற வழக்கைத் தொடரலாம்.".

புதிதாக 114–A ஆம் பிரிவினை உட்புகுத்துதல்.

58. முதன்மைச் சட்டத்தின் 114ஆம் பிரிவிற்குப் பிறகு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

**"114–A. உரிமம் பெறுதல் தோல்வியின் விளைவுகள், முதலியன அல்லது அவற்றை மீறுதல்.—**

இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதி, துணை விதி அல்லது ஒழுங்குமுறை எதுவும், எந்த ஒரு செயலையும் செய்வதற்கு உரிமம் அல்லது அனுமதி அவசியமாக இருந்தால் மற்றும் அத்தகைய உரிமம் அல்லது அனுமதி இன்றி அல்லது அத்தகைய உரிமம் அல்லது அனுமதி எதனின் விதிமுறைகளுக்கு முரணான வகையில் செய்தால் இந்தச் சட்டத்தின் தருவாய் வேறுபொருள் குறித்தாலன்றி.—

(a) ஆணையாளர் அறிவிப்பின் மூலம் குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள், அத்தகைய செயலை செய்யும் நபரிடம், அசையும் அல்லது அசையா சொத்து எதுவும், பொது அல்லது தனியாக பாதிக்கப்பட்ட சொத்தின் முழு அல்லது பகுதி எதுவும் அதன் உண்மையான நிலைக்கு மாற்ற, அகற்ற, அல்லது நடைமுறைக்குக் கொண்டு வர கூடிய வரை மீட்டெடுக்கும்படி கோரலாம்.

(b) ஆணையாளர் அல்லது அவரால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் எவரும், அத்தகைய செயல்படும் கட்டடம் அல்லது நிலத்திற்குள் அத்தகைய செயல் தொடர்வதை தடுக்க அத்தகைய சட்டத்திற்கு இணங்கி தேவையான நடவடிக்கைகள்அனைத்தையும் எடுக்கலாம்; மற்றும்

(c) அத்தகைய செயலை செய்பவர் குற்றவியல் நீதிபதி முன் தண்டனையின் பேரில் அத்தகைய ஒவ்வொரு குற்றத்திற்கும் இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாமல் அபராதம் விதிக்கப்படுவார்.".

புதிதாக 116–A ஆம் பிரிவினை உட்புகுத்துதல்.

59. முதன்மைச் சட்டத்தின் 116ஆம் பிரிவிற்குப் பிறகு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல், வேண்டும், அதாவது;—

**"116–A. வரிகளை மீட்டெடுத்தல்.– (1)** அறிவிக்கை வழங்கப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் வரி செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்படாவிட்டால், வரி செலுத்த வேண்டிய நபர் ஆணையரின் மனநிறைவுக்கு காரணம் காட்டவில்லை எனில் ஆணையரால் வகுத்துரைக்கப்படலாகும் நடைமுறையைப் பின்பற்றி தனது பிடியாணையின் கீழ் கடனை திருப்பிச் செலுத்தாதவரின் அசையும், அசையா சொத்தை விற்பதன் மூலம் அல்லது வரி செலுத்த வேண்டிய கட்டடம் அல்லது நிலத்தின் பயன்பாட்டாளராக இருந்தால் திரும்பப்பெறலாம். அத்தகைய கட்டடம் அல்லது நிலத்தில் காணப்படக்கூடிய அசையும் சொத்தின் விற்பனை மூலம், வரிக் கணக்கில் செலுத்த வேண்டிய தொகையும் தடுப்புக்காவல் தொடர்பாக ஏற்படக்கூடிய சாத்தியமான கூடுதல் தொகைகளும் இவ்வாறு தடை செய்யப்பட்ட சொத்து விற்பனையானது:

**வரம்புரையாக,** 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் V/1908) 60ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் வரம்புரையில் வரையறுக்கப்பட்டுள்ள அசையும் சொத்தினை கைப்பற்றுதலுக்கு பொறுப்பாகாது.

(2) காரணம் எதற்காகவும், கடனைத் திருப்பிச் செலுத்தாதவரின் சொத்தில் கவனம் செலுத்துவது இயலாது எனில், ஆணையாளர், குற்றவியல் நீதிபதி முன் கடன் தவறியவர் மீது வழக்கு தொடரலாம்.

(3) இந்தச் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரி, அல்லது பிற தொகையை வசூலிப்பதற்காக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கிலிருந்து நகராட்சி தடையேற்படுத்துவதை எதுவும் தடுக்காது.

60. முதன்மைச் சட்டத்தின் 117–B ஆம் பிரிவில்,— 117–B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) அட்டவணை உட்பட உட்பிரிவு (2)க்கு, பின்வரும் துணைப் பிரிவு மாற்றாக அமைக்கப்படும், அதாவது:–

“(2) நகராட்சி பகுதிக்குள், ஒரு நிறுவனத்தின் ஒவ்வொரு கிளை அல்லது அலகு, பிரிக்கப்படாத இந்து குடும்பம், நிறுவனம், தனியார் அல்லது பிற தனியார் அமைப்பு, சமூகம், சங்கம், வணிகத்தை பரிவர்த்தனை செய்யும் நபர்கள் அல்லது சங்கங்களின் அமைப்பு மற்றும் எந்தவொரு தொழிலிலும், வர்த்தகத்திலும் தீவிரமாகவோ அல்லது வேறுவிதமாகவோ ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வீதத்தில் கணக்கு தாக்கலாகும் அரையாண்டின் தொடக்க நாளில் அரையாண்டிற்கான வரியை செலுத்துதல் வேண்டும்:

*வரம்புரையாக,* ஊழியருக்கான வரி விகிதம் ஆண்டுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும்.”;

(2) (4) ஆம் உட்பிரிவில்,–

(a) “எங்கே ஒரு நிறுவனம் அல்லது நபர்”, எனும் சொற்டொருக்காக “எங்கே ஒரு நிறுவனத்தின் கிளை அல்லது அலகு, இந்து பிரிக்கப்படாத குடும்பம், நிறுவனம், கழகம் அல்லது பிற தனியார் அமைப்பு, சமூகம், சங்கம், நபர்களின் அமைப்பு அல்லது நபர்களின் சங்கம்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) “அத்தகைய நிறுவனம் அல்லது நபர்” என்ற வெளிப்பாடு, “ஒரு நிறுவனத்தின் கிளை அல்லது அலகு, இந்து பிரிக்கப்படாத குடும்பம், நிறுவனம், தனியார் அல்லது பிற தனியார் அமைப்பு, சமூகம், சங்கம், நபர்களின் அமைப்பு அல்லது நபர்களின் சங்கம்” மாற்றாக வேண்டும்;

(3) 6 ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

61. முதன்மைச் சட்டத்தின் 117–H ஆம் பிரிவில், (c) கூறுக்காக, அதன்கீழ் வகைமுறை உள்ளடங்களாக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது;– 117–H ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(c) 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் (மையச் சட்டம் 49/2016) 2 ஆம் பிரிவில், (r) கூறில் வரையறுக்கப்பட்ட முக்கிய குறைபாடுள்ள நபர்கள்.”.

62. முதன்மைச் சட்டத்தின் VI–A அத்தியாயத்திற்கு பிறகு பின்வரும் அத்தியாயம் உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– அத்தியாயம் VI–Bஐ உட்புகுத்தல்

''**அத்தியாயம் VI–B.**

**விளம்பரப்பலகை, மின்னிலக்கத்திரை மற்றும் விளம்பர அட்டையை முறைப்படுத்துதல்.**

**117–K. பொருள் வரையறைகள்.–** இந்த அத்தியாயத்தில்,–

(a) ''மின்னிலக்கத்திரை'' என்றால் பொது இடம் அல்லது தனியார் இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட பலகைத் தட்டிகள் எவையும் எனப் பொருள்படும்;

(b) ''விளம்பரப் பலகை'' என்றால் பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட பலகைத் தட்டிகள் எவையும் எனப் பொருள்படும்;

(c) ''விளம்பர அட்டை'' என்றால், பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட, எட்டு அடி உயரம் நான்கு அடி அகலத்திற்கு மேற்படாத அளவிலான பலகைத் தட்டிகள் எவையும் எனப்பொருள்படும்.''

**117–L. விளம்பரப்பலகை வைப்பதற்கான ஒழுங்குமுறை.– (1)** ஆணையாளரிடமிருந்து, உரிமம் எதுவும் பெறாமல் நபரெவரும் எந்த இடத்திலும் விளம்பரப்பலகை எதுவும் வைத்தலாகாது.

(2) (1) ஆம் உட்பிரிவிற்கான ஒவ்வொரு விண்ணப்பமானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், அத்தகைய விவரங்கள் உள்ளடக்கி அத்தகைய விண்ணப்பக் கட்டணத்துடன் ஆணையருக்கு செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆணையாளர், ஆண்டொன்றுக்கு ஒரு சதுர அடிக்கு இருபதாயிரம் ரூபாய்க்கு மிகாத வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தை செலுத்துவதன் பேரில், ஆய்வினை செய்த பின்பு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுடன் உரிமத்தினை வழங்கலாம்.

(4) ஆணையாளர், எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யும் காரணங்களுக்காக, உரிமம் வழங்குவதை மறுக்கலாம்:

வரம்புரையாக, விண்ணப்பதாரருக்கு அவரின் முறைபாட்டினை வழங்குவதற்கு வாய்ப்பொன்றை அளிக்காமல், உரிமமானது மறுக்கப்படுதலாகாது.

(5) (3) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், மூன்று ஆண்டுகள் காலத்திற்கு செல்லுபடியாகும் மற்றும் புதுப்பிக்கலாம்.

(6) (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவின் படி செலுத்தப்பட்ட தொகையானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், தொடர்புடைய மாநகராட்சியின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**117–M. மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகளையும் விளம்பர அட்டைகளையும் நிறுவியமைப்பதை முறைப்படுத்துதல்.–** (1) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், நபர் எவராலும் ஆணையரின் முன்அனுமதி பெறாமல் விளம்பரம் அல்லது தகவல் எதனையும் காட்சிக்கு வைப்பதற்கு நிறுவியமைக்கப்படுதல் கூடாது.

(2). (1) ஆம் உட்பிரிவின்படியான அனுமதிக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் அத்தகைய கட்டணம் வகுத்துரைக்கப்படலாகும், மின்னணு விளம்பர அட்டை ரூபாய் பத்தாயிரத்திற்கு மிகாமல், மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை நிறுவப்படும் தேதிக்கு பதினைந்து நாள்களுக்கு முன்னதாக ஆணையரிடம் எழுத்துருவில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை நிறுவியமைப்பதற்கான அனுமதியானது ஆணையாளரால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நோக்கத்திற்காக ஆறு நாட்கள் கால அளவுக்கு, மேற்படாத அத்தகைய கால அளவிற்கு, அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படலாம்.

(4) ஆணையாளர், எழுத்துருவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அனுமதி வழங்க மறுக்கலாம்.

(5) அனுமதியைப் பெற்றதற்குப் பின்னர் மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை நிறுவியிருக்கிற ஒவ்வொரு நபரும், அத்தகைய அனுமதி முடிவுற்றதன் பேரில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் நல்வாழ்விற்கும் சுற்றுச்சூழலுக்கும் இன்னல் எதுவும் ஏற்படாத வகையில் அதனை அகற்றி அழித்தல் வேண்டும்.

**117–N. உரிமத்தினை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்:–**

(1) இந்த அத்தியாயத்தின் கீழ் உரிமதாரர் பொறுப்பாகும் பிற தண்டம் எதற்கும் குந்தகமின்றி, ஆணையர், எந்த நேரத்திலும், எழுத்துப்பூர்வமான ஆணையின் மூலம், **117–L பிரிவின் கீழ்,–**

(a) அத்தகைய உரிமமானது, மோசடி, தவறான சித்தரிப்பு அல்லது பொருள் விவரங்களை வெளியிட மறுத்தலின் மூலம் பெற்றிருந்தால்; அல்லது,

(b) உரிமதாரர் வழங்கப்பட்ட உரிமத்திற்குட்பட்டு, இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது நிபந்தனைகள் எதனையும் மீறினால்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமம் ஒன்றை நீக்கம் செய்வதற்கு முன்பு, உரிமையாளருக்கு அவரது விண்ணப்பத்தை அளிக்க ஆணையாளராரைக் கோருதல் வேண்டும்.

**117–O. அதிகாரமளிக்கப் பெறாது அமைத்த விளம்பரப் பலகை, மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டையை அகற்றுதல்.–** (1) உரிமமொன்று இல்லாமல் அமைக்கப்பட்ட விளம்பரப் பலகை எதனையும் அல்லது அனுமதியின்றி அமைக்கப்பட்ட மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை எதனையும் ஆணையர் அறிவிப்பு ஏதுமின்றி அகற்றிப் பறிமுதல் செய்தல் வேண்டும் மற்றும் அங்கீகரிக்கப்படாத, விளம்பர பலகை, மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை அமைத்த நபரிடமிருந்து அகற்றுவதற்கான செலவினை நிலவருவாய் நிலுவையொன்றைப்போன்று வசூலித்தல் வேண்டும்.

**117–P. குறித்த சில நேர்வுகளில் விளம்பரப் பலகை, மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை அகற்றப்படுதல்.–** (1) விளம்பரப் பலகை அல்லது மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை எதுவும் உரிமத்தின் கால அளவு முடிவடைந்த பின்னரும் அகற்றாப்படாமல் வைக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது உரிம நிபந்தனைகளுக்கு மீறுதலாக அமைக்கப்பட்டிருக்குமிடத்து, நேர்விற்கேற்ப, ஆணையர் எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக உரிமம் பெற்றவரை வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவுக்குள்ளாக அத்தகைய விளம்பரப் பலகையை அகற்றுமாறு கோரலாம்.

(2) அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக விளம்பரப் பலகை அல்லது மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை அகற்றப்படாதவிடத்து, ஆணையர், மேற்கொண்டு அறிவிப்பு கொடுக்காமலேயே அத்தகைய விளம்பரப் பலகையை அகற்றி அதற்கான செலவினங்களை நில வருவாய் நிலுவையொன்றைப் போன்று வசூலித்தல் வேண்டும்.

**117–Q. விலக்களித்தல்.–** இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள எதுவும், தொடர்புடைய விளம்பர பலகை, மின்னணுதிரை அல்லது விளம்பர அட்டை விளம்பரத்தை பொருத்து–

(a) அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் ஏதேனும் விற்பனை அல்லது கூட்டம், அல்லது கேளிக்கை அல்லது அதில் ஏதேனும் விளைவுகள் அல்லது அத்தகைய நிலம் அல்லது கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட அத்தகைய விளம்பரப்பலகை, மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை செய்யப்பட்ட நிலம் அல்லது கட்டடத்திற்குள் செய்யும் வர்த்தகம் அல்லது வணிகம்

(b) விளம்பரப்பலகை, மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை அமைக்கப்பட்டுள்ள நிலத்தின் பெயர் அல்லது அந்த நிலத்தை ஆக்கிரமிப்பவரின் பெயருக்கு தொடர்புடைய விளம்பரம் செய்யப்பட்ட விளம்பரப்பலகை, மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை எதற்கும் பொருந்தாது.

*வரம்புரையாக,* இந்தப் பிரிவின் விலக்களிப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விளம்பரப்பலகை, மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டை ஆகியவற்றின் அளவு மற்றும் தன்மைக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

**117–R. மேல்முறையீடு.–** (1) இந்த அத்தியாயத்தின் கீழ் ஆணையாளரால் உரிமம் வழங்குவதை அல்லது புதுப்பித்தலுக்கு மறுத்தல் அல்லது அனுமதி வழங்க மறுத்தல் அல்லது ரத்து செய்தல் ஆணைக்கெதிராக, அந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீட்டினை செய்யலாம்.

(2) மேல் முறையீடானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும், படிவத்திலும் மற்றும் அத்தகைய கட்டணத்துடனும் செய்யப்படுதல் வேண்டும்.

(3) மேல் முறையீட்டு அதிகார அமைப்பானது அத்தகைய மேல் முறையீட்டினை பெறுவதன் பேரில், தேவைப்படலாகும் அத்தகைய விசாரணையை செய்த பின்பு மற்றும் கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை மேல்முறையீட்டாளருக்கு வழங்கிய பின்பு, அது தக்கதெனக் கருதலாகும் அத்தகைய ஆணையினை பிறப்பிக்கலாம்.

**117–S. நகராட்சியிடமுள்ள சொத்துக்களில் விளம்பரம் செய்வதற்கான உரிமை வழங்குவதற்கான அதிகாரம்.–** 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி (சிதைவைத் தடுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1959) அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதனின் வகைமுறைகளுக்குட்பட்டு, ஆணையாளர், வகுத்துரைக்கப்படலாகும் கட்டணத்தை செலுத்துவதின் பேரில், நகராட்சியிடம் உள்ள, அல்லது நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களில் விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு, நபர் அல்லது நபர்களின் வகைகள் அல்லது நிறுவனம் அல்லது அமைப்பு எதற்கும் உரிமை வழங்கலாம்.

வரம்புரையாக, பொது தனியார் கூட்டுத் திட்டத்தில் தனி பங்குதாரராக இருக்கும் நேர்வில், அந்த கட்டணமானது, தனியார் பங்குதாரரால் ஏற்படும் செலவுக்கு எதிராக கட்டணமானது சரிகட்டப்படுதல் வேண்டும்.

**117–T. குறித்த சில விளம்பரப் பலகைகளை, மின்னிலக்கத்திரைகளை அல்லது விளம்பர அட்டைகளை அமைப்பதற்கு தடை.–** இந்தச் சட்டத்தில் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதுவும் அல்லது நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்பு, தீர்ப்புரை அல்லது ஆணை எதிலும் அடங்கியுள்ளது எவ்வாறிருப்பினும்,

(a) (i) தடையற்ற மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து நடமாட்டத்தினை பாதிக்கும்பொருட்டு சாலையில் போக்குவரத்திற்கு தெளிவாக தெரியக்கூடிய விளம்பரப் பலகை எதுவும் (போக்குவரத்து அடையாளக் குறி மற்றும் சாலை வழிகாட்டியைத் தவிர்த்து) பாதுகாப்பான சாலை போக்குவரத்து இயக்கத்திற்கு ஆபத்தாக மற்றும் இடையூறாக இருக்கிறவிடத்து ஆணையாளர் எழுத்து மூலமான அறிவிப்பினால், அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய காலத்திற்குள் உரிமம் பெற்றவரை அல்லது அத்தகைய விளம்பரப் பலகையை வைத்துள்ள நபர் எவரையும் அத்தகைய விளம்பரப் பலகையை அகற்றுமாறு கோருதல் வேண்டும்.

*வரம்புரை:–* ஆனால் அத்தகைய காலமானது அத்தகைய அறிவிப்பை வெளியிட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்கு மிகாது இருத்தல் வேண்டும்.

(ii) (i) ஆம் உட்கூறில் சுட்டப்பட்டுள்ள விளம்பரப் பலகை, அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்திற்குள் அகற்றப்படாதவிடத்து ஆணையர், மேற்கொண்டு அறிவிப்பு கொடுக்காமலேயே அத்தகைய விளம்பரப் பலகையை அகற்றி அதற்கான செலவினங்களை நில வருவாய் நிலுவையொன்றைப் போன்று வசூலித்தல் வேண்டும்.

(b) (i) சாலையில் போக்குவரத்திற்கு தெளிவாக தெரியுமாறு விளம்பரப் பலகை (போக்குவரத்து அடையாளக் குறி மற்றும் சாலை அடையாளக் குறி அல்லாத பிற) எதையும் அமைக்கப்பட்டிருப்பதானது பாதுகாப்பான சாலை போக்குவரத்து இயக்கத்திற்கு ஆபத்தை மற்றும் இடையூறினை உருவாக்கக் கூடுமென ஆணையாளர் மனநிறைவு அடைகிறவிடத்து நேர்விற்கேற்ப, 117–L ஆம் அல்லது 117–M ஆம் பிரிவின் படி அவர் உரிமம் எதையும் வழங்குதல் கூடாது.

(ii) (i) ஆம் உட்கூறுக்கு மீறுகையாக அமைக்கப்பட்டிருக்கிற விளம்பரப் பலகை, மின்னிலக்கத்திரை அல்லது விளம்பர அட்டைகள் எதனையும் அறிவிப்பு ஏதுமின்றி ஆணையாளர் அகற்றி பறிமுதல் செய்ய வேண்டும். அதற்கான செலவினங்களை நில வருவாய் நிலுவையொன்றைப் போன்று வசூலித்தல் வேண்டும்.

**117–U. பணத்தண்டம்.–** இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஆணை எவற்றையும் மீறுபவர் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் சட்டப்பூர்வ செயல்பாட்டினை தடை செய்யும் நபரெவரும், மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டனையுடன் அல்லது இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டமும் விதித்து அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, ஆணையரின் அனுமதியின்றி மின்னிலக்கத் திரையை அல்லது விளம்பர அட்டையை அமைக்கின்ற நபர் எவரும் ஓராண்டு வரை நீட்டிக்கலாகும் கால அளவிற்கு சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத் தண்டமோ அல்லது அவைகள் இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.''.

63. முதன்மைச் சட்டத்தின் 120 ஆம் பிரிவில்,— 120 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (5) ஆம் உட்பிரிவில், (iv) ஆம் கூறிற்கு பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(V) நிலத்தின் மேம்படுத்துநர் அல்லது உரிமையாளர் திறந்தவெளியையோ அல்லது சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தையோ, பரிந்துரைக்கப்பட்ட மேம்பாட்டுக் கட்டணங்களுடன் ஒப்படைக்கவில்லை என்றால்.” ;

(2) (6) ஆம் உட்பிரிவில், அதன் வரம்புரை உட்பட இரண்டு இடங்களில் வருகின்ற “மன்றம்” என்ற சொற்றொடருக்காக, “ஆணையாளர்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (7) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:–

“(8) ஒரு தனியார் தெரு உரிமையாளர்கள் எவராலும் சமன் செய்யப்பட்ட, நடைபாதை, உலோகம், கொடி, கால்வாய், வடிகால், பாதுகாக்கப்பட்ட மற்றும் விளக்குகள் இருந்தால், அத்தகைய தெரு, அதன் உரிமையாளர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாத கோரிக்கையின் பேரில், பொதுத் தெரு என அறிவிக்கப்படுதல் வேண்டும்.”.

121 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

64. முதன்மைச் சட்டத்தின் 121 ஆம் பிரிவில்,–

(1) பின்வரும் சொற்றொடரானது (2) ஆம் உட்பிரிவில் இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“மற்றும் அத்தகைய அறிவிப்பு வழங்கப்பட்ட நபரிடமிருந்து செலவை மீட்டெடுக்கவும்.”;

(2) அவ்வாறு திருத்தப்பட்ட (2) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:–

“(3) ஆணையாளரின் முன் அனுமதியின்றி ஒரு வரைபடம் அல்லது புதிய தனியார் தெருவை உருவாக்குபவர், குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஓர் ஆண்டு வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையும், ஒரு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதமும் சேர்த்து விதிக்கப்படலாம், மேலும் அத்தகைய மீறல் தொடருமானால், ஒரு நாளைக்கு ஆயிரம் ருபாய்க்கு மிகாமல் இருக்கக்கூடிய ஒரு தொகை விதிக்கப்படலாம்.”.

125 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

65. முதன்மைச் சட்டத்தின் 125ஆம் பிரிவில், உட்பிரிவு (3) இல், “1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (மைய சட்டம் I/1894)” என்ற சொற்றொடருக்காக, “2013 ஆம் ஆண்டு நியாயமான இழப்பீடு மற்றும் நிலம் கையகப்படுத்துதலில் வெளிப்படைத்தன்மைக்கான உரிமை, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் சட்டம் (மைய சட்டம் 30/2013), அல்லது மாநிலத்தின் வேறு எந்தவொரு சட்டம்” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

127–A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

66. முதன்மைச் சட்டத்தின் 127ஆம் பிரிவிற்கு பிறகு, பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:–

**“127–A. நகர்ப்புற காடுகள், மரக்கன்றுகள் நடுதல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை மேம்படுத்துதல்.–** நகர்ப்புற காடுகளை மேம்படுத்துதல், மரங்கள் நடுதல், பொது பூங்காக்கள், தோட்டங்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான உட்புற மற்றும் வெளிப்புற விளையாட்டு மைதானங்களை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை நகராட்சி எடுக்க வேண்டும்.

67. முதன்மைச் சட்டத்தின் 128 ஆம் பிரிவில்,– 128 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில், (a) மற்றும் (b) கூறில், ''நகராட்சி அல்லது மத்திய அல்லது மாநில அரசுகளின் துறைகளுக்குச் சொந்தமான நிலம்'' என்ற சொற்றொடருக்காக, ''நகராட்சிக்கு சொந்தமான அல்லது நகராட்சியிடமுள்ள'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில்,–

(a) ''நகராட்சி அல்லது மத்திய அல்லது மாநில அரசுகளின் துறைகளுக்குச் சொந்தமான நிலம்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''நகராட்சிக்குச் சொந்தமான அல்லது நகராட்சியிடமுள்ள நிலம்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) ''இருபதாயிரம் ரூபாய்'' என்ற சொற்றொடருக்கு பதிலாக ''ஐம்பதாயிரம் ரூபாய்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

68. முதன்மைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவானது விட்டு விடப்படுதல் வேண்டும். 131 ஆம் பிரிவினை விட்டுவிடுதல்.

69. முதன்மைச் சட்டத்தின் 133 ஆம் பிரிவில், – 133 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பு மற்றும் (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் உள்ள, ''புனரமைப்பு'' எனும் சொற்றொடருக்காக, ''புனரமைப்பு அல்லது இடித்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (5) ஆம் உட்பிரிவில், ''கட்டுமானம் அல்லது புனரமைப்பு'' எனும் சொற்றொடருக்காக ''கட்டுமானம், புனரமைப்பு அல்லது இடித்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

70. முதன்மைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவில், ''பத்தாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக ''ஒரு லட்சம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 134 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

71. முதன்மைச் சட்டத்தின் 135 ஆம் பிரிவில், (6) ஆம் உட்பிரிவில் உள்ள ''ஆணையாளர்'' எனும் சொற்றொடருக்காக, ''ஆணையாளர் கட்டடத்தை பூட்டி முத்திரையிடலாம் அல்லது'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 135 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

72. முதன்மைச் சட்டத்தின் 137 ஆம் பிரிவிற்கு, பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 137 ஆம் பிரிவிற்கு மாற்றீடு.

**''137. வீதியில் விழுந்த மரங்கள், கட்டமைப்புகள், கட்டிடப் பொருட்கள் போன்றவற்றை அகற்றுதல்.–** மரங்கள், கட்டமைப்புகள் அல்லது வேலிகள் விழுந்து அல்லது கட்டடப் பொருட்களை அடுக்கி வைப்பதன் மூலம் ஏதேனும் தெருவில் ஏதேனும் தடை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அத்தகைய தடை ஏற்பட்ட பன்னிரெண்டு மணி நேரத்திற்குள் அல்லது ஆணையாளர் அறிவிப்பின் மூலம் அனுமதிக்கும் அத்தகைய கூடுதல் காலத்திற்குள், தெருவிலுள்ள அத்தகைய தடைகளை அகற்ற வேண்டும். கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அறிவிப்புக்கு இணங்கத் தவறினால், ஆணையாளர் தெருவில் உள்ள தடைகளை அகற்றி, உரிமையாளர் அல்லது ஆக்கிரமிப்பாளரிடமிருந்து அகற்றுவதற்கான செலவை நில வருவாயின் நிலுவையொன்றைப் போன்று வசூலிக்க வேண்டும். தெருவில் இதுபோன்ற இடையூறு ஏற்படுத்தியதற்காக ஆணையாளர் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாமல் அபராதம் விதிக்கலாம்.

புதியதாக 137–A மற்றும் 137–B ஆம் பிரிவுகளை உட்புகுத்தல்.

73. முதன்மைச் சட்டத்தின் 137 ஆம் பிரிவிற்கு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"137–A. நீச்சல் குளம் கட்ட அனுமதி.–** (1) ஆணையாளரிடம் அனுமதி பெறாமல், எந்த இடத்திலும் நீச்சல் குளம் கட்டக்கூடாது.

(2) நீச்சல் குளம் அமைப்பதற்கான அனுமதிக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் ஆணையாளரிடம் செய்யப்பட வேண்டும், மற்றும் இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருக்கும் கட்டணம் மற்றும் பரிந்துரைக்கப்படும் விவரங்களுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு விண்ணப்பத்தைப் பெறுவதன் பேரில், ஆணையர், அவர் தேவையெனக் கருதும் விசாரணையை மேற்கொண்ட பிறகு, அனுமதி வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம். வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதியும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனை மற்றும் வரையறைகளுக்குட்பட்டு அத்தகைய வடிவத்தில் இருக்க வேண்டும்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் அனுமதி வழங்க ஆணையர் மறுத்தால், அத்தகைய மறுப்புக்கான காரணங்களை அவர் எழுத்துப்பூர்வமாக அளிக்க வேண்டும்.

(5) நீச்சல் குளம் அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும், நீச்சல் குளத்தை வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில் பராமரிக்க வேண்டும் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(6) இதன் பொருட்டு அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நபரும், 190 ஆம் பிரிவின் விதிகளுக்கு உட்பட்டு, நீச்சல் குளத்தைப் பயன்படுத்தும் நபர்களின் பாதுகாப்பிற்காக அல்லது நீச்சல் குளத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்காகவும் தேவைப்படும் விசாரணை மேற்கொள்ள அல்லது ஆய்வு செய்ய மற்றும் எந்தவொரு நடவடிக்கைகள் எடுக்க, அவரின் கருத்தில் உள்ள எதையும் செய்ய அல்லது நீச்சல் குளம் அமைந்துள்ள நிலத்தில் அல்லது கட்டடத்தினுள் நுழையலாம்.

வரம்புரையாக, இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, எந்தவொரு அதிகாரியையும், அரசு அங்கீகரிக்க வேண்டும்.–

(i) பள்ளிகளின் வளாகத்தில் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்தமட்டில், பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் இணை இயக்குநர் பதவிக்குக் குறையாத;

(ii) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் வளாகத்தில் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்தமட்டில், கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின் இணை இயக்குனரின் பதவிக்குக் கீழே குறையாத;

மேலும், பல்வேறு வகையான கட்டடங்கள் அல்லது நீச்சல் குளங்கள் அமைந்துள்ள நிலங்களுக்கு வெவ்வேறு நபர்களை அரசு அங்கீகரிக்கலாம்.".

**137–B. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை நிறுவுதல்.–**

(1) அரசால் அல்லது அரசினால் சொந்தமாக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட சட்டப்பூர்வமான அமைப்பு அல்லது ஒரு நிறுமம் அல்லது நிறுவனம் ஆகியவற்றினால் சொந்தமாக்கப்பட்ட அல்லது உடமையாக்கப்பட்ட ஒவ்வொரு கட்டடத்திலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பானது, நேர்விற்கேற்ப அரசு அல்லது அத்தகைய சட்டப்பூர்வ அமைப்பு அல்லது நிறுமம் அல்லது பிற நிறுவனத்தினால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், வழங்கப்படுதல் வேண்டும்.

(2) கட்டடத்தின் உரிமையாளர் அல்லது உடமையிலிருப்பவர், ஒவ்வொருவரும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், கட்டடத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை ஏற்படுத்துதல் வேண்டும்.

*விளக்கம்:*– கட்டடம் ஒன்று ஒரு நபருக்கு மேல் சொந்தமாக்கப்பட்டிருந்தால் அல்லது உடமையிலிருந்தால், அத்தகைய ஒவ்வொரு நபரும் இந்தப்பிரிவின் கீழ் பொறுப்புடையவராகுதல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் படி தேவைப்பட்டவாறு, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பானது வழங்கப்படாதவிடத்து, ஆணையர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபர் எவரும், கட்டடத்தின் உரிமையாளர் அல்லது உடமையிலிருப்பவருக்கு அறிவிப்பு கொடுத்த பின்பு, அத்தகைய கட்டடத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை வழங்க மற்றும் சொத்துவரியினைப் போன்ற அத்தகைய முறையில் அதன் தற்செயலான செலவுகளுடன் அத்தகைய ஏற்பாடுகளின் செலவை திரும்பப்பெறவும் செய்யலாம்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் எவ்வாறிருப்பினும், கட்டடத்தின் உரிமையாளர் அல்லது உடமையிலிருப்பவர், அந்தக் கட்டடத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை வழங்குவதற்கு தவறுமிடத்து, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வழங்கப்படும் வரையில், அத்தகைய கட்டடத்திற்கு வழங்கப்பட்ட குடிநீர் வழங்கல் இணைப்பானது, துண்டிக்கப்படுதல் வேண்டும்.

74. முதன்மைச் சட்டத்தின் 141 ஆம் பிரிவில், ''அரசு'' எனும் சொற்றொடருக்காக ''மாவட்ட ஆட்சியர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 141 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

75. முதன்மைச் சட்டத்தின் 144 ஆம் பிரிவில், ''ஓராண்டுக்காலம்'' எனும் சொற்றொடருக்காக ''ஐந்து ஆண்டுக்காலம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 144 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

76. முதன்மைச் சட்டத்தின் 145 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், பின்வருவன இறுதியாக சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது;– 145 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''தேவை எனக் கருதினால், கட்டடத்தை பூட்டி முத்திரையிடலாம்.''.

77. முதன்மைச் சட்டத்தின் 145 ஆம் பிரிவிற்கு பிறகு, பின்வரும் பிரிவுகள் உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– புதிதாக 145–A முதல் 145–C வரை புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**''145–A. கட்டடத்தின் அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டை மாற்றுவதைத் தடைசெய்யும் அதிகாரம்.–**

(1) ஆணையாளரின் முன் அனுமதியின்றி அல்லது அத்தகைய அனுமதியின் நிபந்தனைகளுக்கு இணங்காமல் எந்த நபரும்,–

(a) உண்மையாக அங்கீகரிக்கப்படாத நோக்கத்திற்காக பயன்படுத்த அல்லது பயன்படுத்த அனுமதிக்கப்பட கூடாது; அல்லது

(b) அனுமதிக்கப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, கட்டடத்தின் பயன்பாட்டின் மாற்றத்தை மாற்ற அல்லது மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட கூடாது.

(2) உட்பிரிவு (1)–ஐ மீறியதற்காக, கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் யாராக இருந்தாலும், எந்தவொரு நபருக்கும் எதிராக எடுக்கப்படும் வேறு எந்த நடவடிக்கைக்கும் பாரபட்சம் இல்லாமல், ஆணையாளர் அத்தகைய நபரிடம் அத்தகைய மீறல் தொடர்ந்த காலம் முழுவதும் அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டிற்கு உட்பட்ட பகுதிக்கு ஒரு மாதத்திற்கு ஒரு சதுர மீட்டருக்கு நூறு ரூபாய்க்கு மிகாமல் அபராதம் விதிக்கலாம்.

**145–B. சுற்றுச்சூழல் காரணங்களுக்காக குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட நோக்கத்திற்காக வளாகத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் அதிகாரம்.–**

அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக வளாகங்கள் எதனையும் பயன்படுத்தும், நபரெவரும், அதில் குறிப்பிடப்பட்ட சுற்றுச்சூழல் காரணங்களுக்கு தவிர, பயன்படுத்துதலாகாது என, நகராட்சி அல்லது அரசு அல்லது மாவட்ட ஆட்சியர் அவரின் அல்லது அதனின் நோக்கத்தில் அறிவிப்பை வழங்கலாம்.

**145–C. நிறைவுச் சான்றிதழ்.–** கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் கட்டடத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் நிறைவுச் சான்றிதழை வழங்க தகுதி வாய்ந்த அதிகாரியிடம் விண்ணப்பிக்க வேண்டும். ஆணையர் கட்டிடத்தை ஆய்வு செய்து, அனுமதிக்கப்பட்ட திட்டத்தின்படி கட்டுமானம் இருப்பதாகத் திருப்தி அடைந்தால், விண்ணப்பித்த நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் முடித்ததற்கான சான்றிதழை வழங்க வேண்டும்.

151 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

78. முதன்மைச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில், ''ஆட்சியர்'' எனும் சொற்றொடருக்காக ''மாவட்ட ஆட்சியர் அல்லது பிற அலுவலர் எவரும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

154 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

79. முதன்மைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவிற்கு பின்வரும் காப்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும்:–

காப்புரையாக நகராட்சி எல்லைக்கு வெளியே எந்தவொரு பணியும் அரசின் முன்அனுமதி இன்றி எடுக்கப்படலாகாது.

157 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

80. முதன்மைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவில்,–

(1) ''தொகை'' எனும் சொற்றொடர் வருகின்ற இடங்களில் ''கட்டணத்தொகை'' என்ற சொற்றொடர் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (2) ஆம் உட்பிரிவிற்கு பிறகு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(2–A) மன்றமானது குடிநீர் கட்டணங்களை மாற்றியமைப்பதற்கான அதிகாரத்தை கொண்டிருத்தல் வேண்டும். மற்றும் புதிய குடிநீர் திட்டத்தை பொருத்தளவில் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில் அதற்கான செலவினத்தின் அடிப்படையில் கட்டணங்கள் வசூலிக்கப்படலாம் அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டும்.''.

159 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

81. முதன்மைச் சட்டத்தின் 159 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(3) நகராட்சியால் பராமரிக்கப்படும் கழிவுநீர் அமைப்பு அந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட துணை விதிகளுக்கிணங்கி, ஒவ்வொரு வீட்டு சேவை இணைப்புக்கான கட்டணங்கள் மற்றும் பாதுகாப்பு வைப்புத்தொகையை, மன்றம் நிர்ணயிக்கும்.''

161 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

82. முதன்மைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவில்,– (1) ஆம் உட்பிரிவில் ''வடிகால்'' எனும் சொற்றொடரானது அது காணப்படுகின்ற இரு இடங்களிலும் ''வடிகால் அல்லது கழிவுநீர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

161–A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

83. முதன்மைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவிற்கு பிறகு, பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"161–A. குடிநீர் வழங்கல் அல்லது சாக்கடையுடன் இணைக்கப்பட்ட வளாகங்களில் அத்துமீறல்.–** (1) ஒரு குழாய் அல்லது குழாய் இயங்கும் அல்லது குடிநீர் வழங்கல் அல்லது சாக்கடையுடன் இணைக்கப்பட்ட எந்த வளாகத்திலும், நகராட்சிக்கு சொந்தமான அல்லது அதற்கு சொந்தமான எந்த நிலத்திலும் அனுமதியின்றி நபரெவரும் நுழையக்கூடாது.

(2) மன்றத்தின் அனுமதியின்றி கட்டடம், சுவர் அல்லது மற்ற கட்டமைப்புகள் எதுவும் அமைக்கப்படக்கூடாது மற்றும் எந்த ஒரு நகராட்சி குடிநீர் குழாய்கள் அல்லது வடிகால் அல்லது கழிவுநீர் குழாய்களின் மீது எந்த தனியார் தெருவும் அமைக்கப்படக்கூடாது.

(3) ஏதேனும் ஒரு கட்டடம், சுவர் அல்லது வேறு அமைப்பு அவ்வாறு எழுப்பப்பட்டாலோ அல்லது ஏதேனும் தெரு அமைக்கப்பட்டாலோ, மன்றம் அதை அகற்றி, அத்தகைய அகற்றலுக்கான செலவை நில வருவாயின் நிலுவைத்தொகையாக வசூலிக்கலாம்.''

84. முதன்மைச் சட்டத்தின் 164 ஆம் பிரிவிற்கு பிறகு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்,– 164–A மற்றும் 164–B எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**164–A கிணறைத் தோண்டுவதற்கான அனுமதியை வழங்குதல்.–**

(1) நபர் எவரும், அவரோ அல்லது அவருக்குப் பதிலாக நபர் எவரின் மூலமாகவோ, ஆணையரிடமிருந்து அனுமதி ஒன்று பெறாமல் நகராட்சி பரப்பிடம் எதிலும் எந்த நோக்கத்திற்காகவும் கிணறு எதனையும் தோண்டுதல் கூடாது.

*வரம்புரை:* ஆனால், இந்த உட்பிரிவு வீட்டு உபயோகத்திற்காக தோண்டப்படும் கிணற்றிற்குப் பொருந்தாது.

*மேலும் வரம்புரை*: ஆனால், இந்த உட்பிரிவு 1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்திற்குரிய (தமிழ்நாடு சட்டம் 27/1987) (2) ஆம் பிரிவின் (g) கூறில் பொருள் வரையறை செய்யப்பட்ட ''பட்டியலிடப்பட்ட பகுதிக்கு'' பொருந்தாது.

(2) கிணறு ஒன்றைத் தோண்ட விரும்பும் நபர் எவரும், இந்த நோக்கத்திற்காக அனுமதியைப் பெறுவதற்கு ஆணையரிடம் விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் ஆணையரால் வழங்கப்பட்டிருக்கிற அனுமதியொன்றினைப் பெற்றிருந்தாலன்றி அத்தகைய கிணற்றை தோண்டுவதற்குத் தொடர்புடைய செயல் எதனையும் செய்தலாகாது.

(3) அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் பத்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(4) (2) ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஆணையர் விண்ணப்பம் ஒன்றினை வழங்கலாம் அல்லது விண்ணப்பம் ஒன்றை வழங்க மறுக்கலாம்.

*வரம்புரை:* ஆனால், விண்ணப்பம் எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

*வரம்புரையாக,* விண்ணப்பதாரருக்கு கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்கப்பட்டாலன்றி அனுமதி எதுவும் மறுக்கப்படுதலாகாது.

(5) அனுமதி வழங்குவது அல்லது வழங்க மறுப்பது தொடர்பான முடிவு, ஆணையரால் விண்ணப்பதாரருக்கு பரிந்துரைக்கப்படக்கூடிய காலத்திற்குள் தெரிவிக்கப்படும்.

(6) உட்பிரிவு (5) இன் கீழ் ஆணையரின் முடிவால் பாதிக்கப்படும் எந்தவொரு நபரும், அத்தகைய காலக்கெடுவிற்குள் மற்றும் பரிந்துரைக்கப்படும் விதத்தில், அறிவிப்பின் மூலம், இதன் பொருட்டு, அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(7) பயன்பாட்டில் உள்ள அல்லது பயன்படுத்தப்படாத ஒவ்வொரு கிணற்றின் உரிமையாளரும், பரிந்துரைக்கப்படக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

**164–B. கிணற்றைத் தோண்டும் வேலையை மேற்கொள்வதற்கு, பதிவுச் சான்றிதழை வழங்குதல்.–** (1) நகராட்சி பரப்பிடம் எதிலும் கிணறு தோண்டும் தொழிலைச் செய்ய விரும்பும் நபர் ஒவ்வொருவரும், பதிவுச் சான்றிதழ் ஒன்றினைப் பெறுவதற்காக மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

*வரம்புரையாக,* இந்தப் பிரிவானது, 1987 ஆம் ஆண்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1987) 2 ஆம் பிரிவின் (g) கூறில் வரையறுக்கப்பட்டவாறான ‘‘பட்டியலிடப்பட்ட பகுதிக்கு’’ பொருந்தாது.

(2) பதிவுச் சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள் உள்ளடக்கி அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கலாகும் இருபதாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரைத்தடைகளுக்குட்பட்டு, மாவட்ட ஆட்சியர் பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்க மறுக்கலாம்.

*வரம்புரை:* ஆனால், பதிவுச்சான்றிதழ் எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(4) பதிவுச் சான்றிதழை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(5) (4) ஆம் உட்பிரிவின்படி மாவட்ட ஆட்சியரின் முடிவினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில், இதன் பொருட்டு அறிவிக்கையினால் அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(6) கிணறு தோண்டும் தொழிலைச் செய்யும் நபர் ஒவ்வொருவரும், கிணறு ஒன்றினை தோண்டும்பொழுது அல்லது தோண்டப்படும் கிணறு ஒன்றினை தோண்டி முடிக்கும்போது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

விளக்கம்.– 164, 164–A மற்றும் 164–B பிரிவுகளின் நோக்கத்திற்காக,

(a) ‘‘தோண்டுதல்’’ அதனுடைய அனைத்து இலக்கண வேறுபாடுகளுடன் மற்றும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடன் தோண்டுதலை, துளையிடுதலை, ஆழ் துளையிடுதலை அல்லது ஆழப்படுத்துதலை உள்ளடக்கும்;

(b) ''கிணறு'' என்பது, நிலத்தடி நீரைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காக அல்லது பிரித்தெடுப்பதற்காக தோண்டப்படும் ஒரு கிணறு என்று பொருள்படும் மற்றும் திறந்த வெளிக் கிணறு, தோண்டப்பட்ட கிணறு, ஆழ்துளைக் கிணறு, தோண்டப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறு, ஆழ்குழாய் கிணறு, வடிகட்டும் இடம், சேகரிப்புக் கிணறு அல்லது வடித்தெடுக்கும் சுரங்க நிலவரை வழி எதனையும் உள்ளடக்கும். ஆனால் நிலத்தடி நீர்வள ஆதாரங்களை அளவிடுவதற்காக மற்றும் மதிப்பிடுவதற்காக செய்யப்படும் அறிவியல் ஆய்வு, ஆய்வுப்பயணம், மேம்பாடு அல்லது மேலாண்மைப்பணியை நிறைவேற்றுவதற்காக அரசால் அல்லது மைய அரசால் தோண்டப்பட்ட கிணறு ஒன்றினை உள்ளடக்காது;

(c) ''நபர்'' என்பது, கூட்டுருமமாக இருக்கின்ற அல்லது கூட்டுருமமாக இல்லாத ஒரு நிறுமத்தை அல்லது தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்.''.

85. முதன்மைச் சட்டத்தின் 167 ஆம் பிரிவில், பின்வரும் சொற்றொடரானது இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– 167 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் நிலையான செயல்பாட்டு நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலம்.''.

86. முதன்மைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், பின்வரும் சொற்றொடரானது இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– 170 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''தொகையினை செலுத்தாததினால், உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு அறிவிப்பு ஒன்றினை வழங்குவதன் மூலம், நகராட்சியானது பணியை மேற்கொண்டு, கூறப்பட்ட உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடமிருந்து செலவை நில வருவாயின் நிலுவைத் தொகையாக வசூலித்தல் வேண்டும்.''.

87. முதன்மைச் சட்டத்தின் 171 ஆம் பிரிவில்,– 171 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்புக்கு, பின்வரும் ஓரத் தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**''குடும்ப நலம் மற்றும் சிறிய குடும்பம் குறித்த நிலை''.**

(2) ''மக்கள் தொகை கட்டுப்பாட்டு திட்டம்'' என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

88. முதன்மைச் சட்டத்தின் 172 ஆம் பிரிவில், ''மன்றம்'' எனும் சொற்றொடருக்காக ''ஆணையர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 172 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

89. முதன்மைச் சட்டத்தின் 173 ஆம் பிரிவில், அந்த பிரிவிற்கு (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும். அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில்,— 173 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (b) கூறில் ''ஆணையாளர் அல்லது குற்றவியல் நீதிமன்ற நடுவர்'' என்ற சொற்றொடருக்காக ''நீதித்துறை நடுவர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (c) கூறுக்குப் பிறகு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(d) நேர்விற்கேற்ப ஒரு சடலத்தை தகனம் செய்யாமல், புதைக்காமல் அல்லது சட்டப்பூர்வமாக அப்புறப்படுத்தாமல், அத்தகைய காலத்திற்கும் மேலாக மற்றும் அத்தகைய முறையில், வளாகம் எதிலும் வைத்திருத்தல்'';

(3) (1) ஆம் பிரிவிற்கு பிறகு, திருத்தப்பட்டபடி, பின்வரும் உட்பிரிவுகள் சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:–

“(2) பொது அல்லது தனிப்பட்ட இடமாக இருந்தாலும், சுடுகாடாகவோ அல்லது இடுகாடாகவோ பயன்படுத்தப்பட்டால், பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதாகக் கண்டறியப்பட்டாலோ அல்லது வேறு எந்த இடத்திலோ இடுகாடுகள் அதிகமாகக் காணப்பட்டாலோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக பதிவு செய்வதால் ஆணையாளர் மன்றத்தின் ஒப்புதலுக்குப்பிறகு, மாவட்ட *அரசிதழில்* ஒரு அறிவிப்பின் மூலம், அத்தகைய சுடுகாடு அல்லது இடுகாட்டை மூடலாம்.

(3) நகராட்சி ஒன்றில் போதுமான நவீன தகனங்கள் இருந்தால், மன்றமானது, அறிவிப்பு மூலம், அத்தகைய நகராட்சி வரம்பிற்குள் திறந்த முறையில் தகனம் செய்வதை தடை செய்யலாம்.”

175 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

90. முதன்மைச் சட்டத்தின் 175 ஆம் பிரிவில்,–

(1) (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளுக்கு, பின்வரும் உட்பிரிவுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

(1) நகராட்சியால், அறிவிக்கப்படலாகும் மூலத்திலிருந்து பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், போக்குவரத்து, பதப்படுத்துதல் மற்றும் திடக்கழிவுகளை அறிவியல் பூர்வமாக அகற்றுதல் போன்றவற்றை நோக்கத்திற்காக, நகராட்சிக்கு உள்ளே அல்லது வெளியே செய்து பொது இடத்தை தூய்மையாக வைத்திருப்பது மன்றத்தின் கடமையாகும்.

(2) நகராட்சியால் சேகரிக்கப்படும் அனைத்து திடக்கழிவுகள், குப்பைகள் மற்றும் பிற பொருட்கள் நகராட்சியின் சொத்தாக இருத்தல் வேண்டும். பொதுமக்கள் விதிகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ளவாறு திடக்கழிவுகளை ஆதாரத்தில் பிரித்து வெவ்வேறு கொள்கலன்களில் சேமித்து அகற்ற வேண்டும். பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்படும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், மறுசுழற்சி செய்தல், செயலாக்குதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றுக்கு நகராட்சி பொருத்தமான வசதிகளை வழங்க வேண்டும்.

(3) நகராட்சி எல்லையிலோ அல்லது அதன் எந்தப் பகுதியிலோ முறையான வடிகால் அமைப்பு வழங்கப்படாத பட்சத்தில், சேகரிக்கப்பட்ட வடிகால் நீரை அறிவியல் பூர்வமாக சேகரித்து, கொண்டு செல்லவும், சுத்திகரிக்கவும், வகுத்துரைக்கப்படலாகும் விதத்தில் அப்புறப்படுத்தவும் நகராட்சி தேவையான ஏற்பாடுகளைச் செய்யலாம்.”.

(2) (4) ஆம் உட்பிரிவில், வரம்புரையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(3) (5) ஆம் உட்பிரிவில்,– (a) (b) கூறில் “மக்கிய உரம்” என்ற சொற்றொடருக்காக, “மக்கிய உரம் அல்லது உயிரி எரிவாயு அல்லது மின்சாரம் அல்லது வேறு ஏதேனும் பொருள்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (d) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(d) அவ்வப்போது அரசால் அறிவிக்கப்படும் எரித்தல், ஆழமாக புதைத்தல், அழுத்த அறைகலன், பல்தர அறைகலன் மூலம், மருத்துவமனைகள், சுகாதார மையங்கள், நோயறிதல் மையங்கள், மருத்துவ ஆய்வகங்களின் உயிரி கழிவுகள் மற்றும் தொழிற்சாலைகள் அல்லாத அபாயகரமான கழிவுகள் தீர்வு செய்தல்”

(4) அவ்வாறு திருத்தப்பட்டதான (5) ஆம் உட்பிரிவிற்குப் பிறகு, பின்வரும் உட்பிரிவுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(6) நகராட்சியில் உள்ள அனைத்து நிலங்கள் மற்றும் கட்டடங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் வளாகத்தை சுகாதாரமாகவும், தூய்மையாகவும் வைத்திருப்பது கடமையாக இருத்தல் வேண்டும்.

(7) மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், சுகாதாரப் பராமரிப்பு மையங்கள், தனி மருத்துவமனை மற்றும் நோய் கண்டறியும் ஆய்வகங்களில் இருந்து வரும் உயிர் மருத்துவக் கழிவுகள் நகராட்சி திடக்கழிவுடன் கலக்கப்படுதல் கூடாது.

(8) நகராட்சியானது அறிவியல் பூர்வமான செயலாக்கம் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கலான நெகிழிக் கழிவு மேலாண்மைக்காக ஒரு தனி அமைப்பை நிறுவ வேண்டும்.

(9) மின் மற்றும் மின்னணுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் அல்லது விற்பனையாளர்கள், சேகரிப்பு மையம் அல்லது சேகரிப்பு இடம் அல்லது இரண்டையும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ, மின்–கழிவுகளைச் சேகரிக்கவோ, அகற்றவோ அல்லது மறுசுழற்சி செய்யவோ பரிந்துரைத்தல் வேண்டும்.

(10) புதிய கட்டுமானம், கட்டடங்களை மாற்றியமைத்தல் மற்றும் மாற்றியமைப்பதில் இருந்து எழும் கட்டுமான மற்றும் இடிப்புக் கழிவுகளை நகராட்சி தனித்தனியாக சேகரித்து, குறிப்பிட்ட பகுதியில் சேமித்து வைக்க வேண்டும் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் விதிகளின்படி செயலாக்க செய்தல் வேண்டும். ஒவ்வொரு கட்டுமானம் மற்றும் இடிப்பு கழிவுகளை சேகரித்தலுக்கும், வசூலித்தலுக்கும், போக்குவரத்துக்கும், செயலாக்கத்திற்கும் மற்றும் அப்புறப்படுத்துவதற்கும் விதிக்கப்படும் கட்டணம் அல்லது கட்டணங்களை மன்றம் வசூலித்தல் வேண்டும்.

(11) சுகாதாரமற்ற கழிப்பறைகளைக் கொண்ட எந்த வளாகமும் நகராட்சியால் இடிக்கப்பட வேண்டும் மற்றும் அத்தகைய இடிப்புக்கான செலவை நில வருவாய் நிலுவையாக வசூலித்தல் வேண்டும்.

(12) எந்த ஒரு நபரும் தெருக்களில், பொது கட்டடங்களில் அல்லது பிற பொது இடத்தில் எச்சில் துப்பக்கூடாது.''.

91. முதன்மைச் சட்டத்தின் 176 ஆம் பிரிவில்,– 176 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் உட்பிரிவானது மாற்றியமைத்தல் வேண்டும். அதாவது:–

''(1) திடக்கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், போக்குவரத்து, அறிவியல் பூர்வமாக செயலாக்குதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றுக்கான நவீன முறைகளை வகுத்துரைக்கப்படலாகும் முறையில் மன்றமானது நடைமுறைப்படுத்தலாம்.'';

(2) (2) ஆம் உட்பிரிவிற்குப் பிறகு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:–

''(3) மொத்த கழிவு உற்பத்தியாளர்கள் தங்கள் வளாகத்தில் இருந்து உருவாக்கப்படும் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு தங்கள் சொந்த செயலாக்க வசதியை நிறுவ வேண்டும். இயல்புநிலையில், மொத்தக் கழிவு உற்பத்தியாளர்களால் உருவாக்கப்படும் கழிவுகளைக் கையாளுவதற்கு, வகுத்துரைக்கப்படலாகும் கட்டணத்தை வசூலிக மன்றமானது ஏற்பாடு செய்யலாம்.''

92. முதன்மைச் சட்டத்தின் 177 ஆம் உட்பிரிவில்,– 177 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (2) ஆம் உட்பிரிவில், (vi) மற்றும் (vii), இனத்திற்கு பின்வரும் இனங்கள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

''(vi) ஒரு பொது ஓய்வு விடுதி, அல்லது தங்கும் இல்லம், அல்லது

(vii) திருமண மண்டபம் அல்லது வணிக வளாகம், அல்லது

(viii) ஒரு மத இடமாக,''.

(2) (3) ஆம் உட்பிரிவிற்குப் பிறகு, அதன் வரம்புரை உட்பட, பின்வரும் உட்பிரிவுகளானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(4) நிலம் அல்லது கட்டடத்தின் உரிமையாளரோ அல்லது ஆக்கிரமிப்பாளரோ, திடக்கழிவுகளை, குப்பைகளை கொட்டவோ அல்லது வைப்பதையோ அல்லது எந்தவொரு பொது இடத்திலோ அல்லது திறந்த நிலத்திலோ எந்தவொரு அசுத்தத்தையும் அனுமதிக்கவோ அல்லது அதற்கென குறிப்பிடப்பட்ட இடத்தைத் தவிர வேறு வகையில் சடலத்தை அகற்றவோ கூடாது.”.

(5) கோயில், மசூதி, தேவாலயம், மடம் அல்லது மத முக்கியத்துவம் வாய்ந்த பிற இடங்கள், அல்லது நிறுவனம் அல்லது, மன்றத்தால் தீர்மானிக்கப்படும் அத்தகைய கட்டணங்களுடன் அத்தகைய இடங்களின் மீது கட்டுப்பாட்டைக் கொண்ட நபரின் எழுத்துப்பூர்வ கோரிக்கையின் அடிப்படையில் நகராட்சி எல்லைக்குள் நடைபெறும் மத நோக்கங்களுக்காக அல்லது பொருட்காட்சி, திருவிழாக்கள், மக்கள் கூட பயன்படுத்தப்படும் எந்தவொரு இடத்திலும் இருந்து உருவாகும் திடக்கழிவுகளை அகற்ற நகராட்சி ஏற்பாடு செய்ய வேண்டும்.

(6) திடக்கழிவுகளை அகற்றுவதற்காக நகராட்சியின் எல்லைக்குள் உள்ள அனைத்து கழிவு உற்பத்தியாளர்களிடமிருந்தும் பயனீட்டாளர் கட்டணத்தை மன்றம் வசூலிக்க வேண்டும்.

(7) எந்தவொரு நபரும், எந்தவொரு தெரு அல்லது பொது இடத்திலும் மலம் கழித்தல் அல்லது சிறுநீர் கழிப்பதன் மூலம் தொந்தரவு செய்யக்கூடாது.

(8) கடைப்பிடிக்கத் தவறியவர்கள் மீது ஆணையர் அவ்வப்போது மன்றத்தால் வகுத்துரைக்கப்படலாகும் அபராதத் தொகையை விதிக்க வேண்டும். அத்தகைய உடனடி அபராதம் நகராட்சியால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட துப்புரவு ஆய்வாளர் பதவிக்குக் குறையாத அலுவலர்களால் வசூலிக்கப்படலாம்.”

புதிய அத்தியாயம் X–A உட்புகுத்துதல்.

93. முதன்மைச் சட்டத்தின் X–ஆம் அத்தியாயத்திற்கு பின்பு, பின்வரும் அத்தியாயமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**“அத்தியாயம் X–A.**

**மலக்கசடு மற்றும் கழிவுநீர்.**

**179–A. பொருள் வரையறைகள்.–** இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,–

(a) “அகற்றும் வசதி” என்பது, வகுத்துரைக்கப்படக்கூடிய அறிவியல் பூர்வமான சுத்திகரிப்பு மற்றும மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை அகற்றுதலுக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்று பொருள்படும்.

(b) “உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு” என்பது, தொடர்புடையவற்றில் முறையே–

(i) பேரூராட்சி என்பது பேரூராட்சியின் செயல் அலுவலர் என்று பொருள்படும்.

(ii) நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சி என்பது நகராட்சி மன்றம் அல்லது மாநகராட்சியின் ஆணையர் மற்றும் பேரூராட்சிக்கு, நகராட்சியின் ஆணையர் மற்றும பேரூராட்சியின் செயல் அலுவலர் என்று பொருள்படும்.

(c) “மலக்கசடு” என்பது, செரிமானமாகாத அல்லது பாதி செரிமானமான அரைநீர்ம அல்லது அரைதிண்ம வடிவிலுள்ள, மலக்கழிவு மற்றும் சாம்பல் நீருடனான அல்லது இல்லாத கருப்புநீரின் சேர்க்கை என்று பொருள்படும்.

(d) “உரிமதாரர்” என்பது, இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினை வைத்து வரும் நபரெவரரும் என்று பொருள்படும்.

(e) ‘‘அனுபவத்திலிருப்பவர்’’ என்பது, நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை அனுபவத்திலிருக்கும் நபர் ஒருவர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தினை உடமையில் கொண்டுள்ள நபர் ஒருவரையும் உள்ளடக்கும்;

(f) ‘‘உரிமையாளர்’’ என்பது, நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதி ஒன்றினை சொந்தமாகக் கொண்டுள்ள நபர் என்று பொருள்படும் மற்றும் அத்தகைய கட்டடத்தின் குத்தகைதாரர் ஒருவரை உள்ளடக்கும்;

(g) ‘‘கழிவுநீர்’’ என்பது, கழிவுநீர்த் தொட்டி அல்லது கழிவுநீர் குளங்களில் சேர்ந்தடைந்துள்ள அல்லது அடங்கியுள்ள திரவ மற்றும் திடப்பொருள் என்று பொருள்படும்.

(h) ‘‘குறிப்பிடப்பட்ட வாகனம்’’ என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதலுக்காக 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) கீழ் அவ்வப்போது ஒப்புதலளிக்கப்படலாகும் அத்தகைய விவரக்குறிப்புகளுடன் கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட குழாய்களம் மற்றும் சேமிப்புத் தொட்டியுடன் பொருத்தப்பட்ட வெற்றிட சரக்குந்துகள் அல்லது அத்தகைய பிற வாகனம் என்று பொருள்படும்.

(i) ‘‘பணியாளர்’’ என்பது, மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் மற்றும் கொண்டுசெல்லுதல் மற்றும் அகற்றுதலுக்காக உரிமதாரரால் ஈடுபடுத்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்.

**179–B. மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்.–** (1) நபரெவரும், செல்லுபடியாகும் உரிமமின்றி நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்து மலக்கசடு அல்லது கழிவுநீரை கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதல் கூடாது.

*வரம்புரையாக,* அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைக் கொண்டு செல்லுதல், சேகரித்தல் அல்லது அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) மலக்கசடு அல்லது கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்லுதல் அல்லது அகற்றுதலுக்கு கருதும் நபரெவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள், ஆவணங்கள் அடங்கிய அத்தகைய படிவத்தில் மற்றும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன், உரிமம் வழங்குவதற்காக உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) (2)ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு உரிமத்தை வழங்கலாம் அல்லது அதற்கான காரணத்தை பதிவு செய்து, உரிமம் வழங்குவதற்கு மறுக்கலாம்.

(4) (3)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(5) உரிமத்தினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பமானது, அது முடிவடைவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் உரிமம் வழங்கும் அதிகாரம் அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(6) (3)ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறையானது, உரிமத்தினை புதுப்பித்தலுக்கும் சமமாக பொருந்துதல் வேண்டும்.

**179–C. மலக்கசடுகள் மற்றும் கழிவு நீர் உரிமையாளரால் அல்லது அனுபவத்தில் இருப்பவரால் நீக்கப்படுதல்.–** நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,–

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர்த் தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்புகளின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவு நீர்த் தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்;

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

(d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவு செய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் (மையச்சட்டம் 25/2013) தடை செய்யப்பட்டவாறான, கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**179–D. உரிமதாரர்களின் கடமைகள்.–** உரிமதாரர் ஒவ்வொருவரும்,–

(a) உரிமத்தில் குறிப்பிடலாகும் நேரம், வழித்தடம் மற்றும் வழங்கப்படும் இடம் தொடர்பான நெறிமுறைகளையும், வரையறைகளையும் பின்பற்றுதல்.

(b) அகற்றுதல் வசதி அல்லது வெளியேற்றும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(d) குறிப்பிட்ட வாகனம் வகுத்துரைக்கப்படலாகும் புவி இடங்காட்டியுடன் பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்தல் மற்றும் புவி இடங்காட்டி கருவியானது இடையூறு இல்லாமல் செயல்படுவதையும், தரவினை அனுப்புவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

**179–E. கசடகற்றல் செயல்முறைகளின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பற்ற வெளியேற்றத்திற்கு தடை.– (1)** உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது,–

(a) மலக்கசடு அல்லது கழிவுநீரை அகற்றுதலுக்கான இடங்கள்;

(b) உரிமதாரர்களின் பட்டியல் மற்றும் அவற்றை அவ்வப்போது பதிவேற்றம் செய்தல்; மற்றும்

(c) உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான வழிமுறையை மாவட்ட *அரசிதழில்* அறிவிக்கை செய்தல் மற்றும் வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(2) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட வாகனத்தின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவு நீரை செறுக்க, சுற்றுச்சூழல் தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(3) உரிமம் வழங்கும் அமைப்பானது, வெளியேற்றுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, ஆய்வுசெய்தல் அல்லது குறிப்பிட்ட வாகனங்களில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி போன்றவை மூலம் நகராட்சி அல்லது பேரூராட்சி எல்லைகளுக்குள் உரிமதாரர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு, சுகாதார ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத அத்தகைய அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

**179–F. தண்டத்தொகை.–**நபரொருவரும், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமமானது வழங்கப்படுவதற்குட்பட்ட விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் வரைக்கட்டுகளை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால் அவரின் முதல் குற்றத்திற்காக இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**179–G. உரிமத்தை இடைநிறுத்தம் அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.–** (1) உரிமதாரர், உரிமத்தின் நிபந்தனைகள் மற்றும் வரைகட்டுகள் அல்லது இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் எதையும் மீறினால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(2) உரிமதாரர், இந்த அத்தியாயத்தின்படி இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உரிமத்தை ரத்து செய்யலாம்.

*வரம்புரையாக,* உரிமம் ரத்து செய்யும் ஆணையினை பிறப்பிப்பதற்கு முன்பு உரிமதாரருக்கு பதினைந்து நாட்களுக்குள் அவரது தரப்பு முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

**179–H. குறிப்பிட்ட வாகனங்கள், பொருட்கள் போன்றவற்றை பறிமுதல் மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.–** (1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்த அத்தியாயத்தின் படியான குற்றமொன்று செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுமிடத்தில், பேரூராட்சியை பொருத்தளவில் வட்டாட்சியரின் படிநிலைக்குக் குறையாத வருவாய்த்துறையின் அலுவலர் எவரும், நகராட்சி மன்றத்தைப் பொருத்தளவில், ஆணையர் மற்றும் மாநகராட்சிகளைப் பொருத்தளவில், உதவி ஆணையாளர் படிநிலைக்கு குறையாத அலுவலர் எவரும் அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி அரசால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு அத்தகைய வாகனம் அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்த அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரடப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்த அத்தியாயத்தின் கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டனை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம் அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் ஆணையிடலாம்.

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய வாகனம் அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு,

(a) பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு;

(b) பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்று மற்றும் கேட்பதற்கான வாய்ப்பொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(4) (3) ஆம் உட்பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் இந்தப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது 179–I ஆம் பிரிவின் படியான ஆணையொன்றின் மூலம் ஒதுக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை கழித்த பின்பு, அல்லது அதற்கு தற்செயலான அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**179–I. மேல்முறையீடு.–** (1) இந்த அத்தியாயத்தின் கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டை தீர்மானிக்கையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீதான அத்தகைய அதிகார அமைப்பின் முடிவு இறுதியானதாகும் மற்றும் நீதிமன்றம் எதிலும் கேள்வி எழுப்பப்படுதல் ஆகாது.''.

180 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

94. முதன்மைச் சட்டத்தின் 180 ஆம் பிரிவில்,

(a) ''பத்தாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக ''இருபத்தைந்தாயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) அதன் வரம்புரையில், ''ஐந்நூறு ரூபாய்'' எனும் சொற்றொடருக்காக, ''ஆயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

180-A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

95. முதன்மைச் சட்டத்தின் 180 ஆம் பிரிவிற்கு பின்பு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**180-A. அனுமதியின்றி அல்லது பதிவின்றி உள்ள ஆழ்துளைக் கிணற்றிற்கான தண்டம்.–** 164-A அல்லது 164-B ஆம் பிரிவு அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகள் எவற்றையும் மீறுகின்றவர், குற்றம் சாட்டப்பட்டதன் பேரில், மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் ஒரு ஆண்டு வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு கால அளவிற்கு தண்டனையும், ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டம் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

96. முதன்மைச் சட்டத்தின் 182 ஆம் பிரிவிற்குப் பிறகு, பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 182 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

**“182. கட்டணம் மற்றும் செலவுத் தொகைகளை செலுத்தத் தவறினால் சிறைத்தண்டனை விதித்தல் போன்றவை.—** இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நீதிமன்ற நடுவரால் விதிக்கப்பட்ட அல்லது மதிப்பிடப்பட்ட அபராதம் அல்லது செலவுகள் எதுவும் செலுத்தப்படாமல் இருந்தால், இந்திய தண்டனைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் XLV/1860) பிரிவுகள் 64 முதல் 70 வரை (இரண்டும் உட்பட) விதிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டுப்பாடுகள், வரம்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பணம் செலுத்தத் தவறினால் குற்றவாளியை சிறையில் அடைக்க குற்றவியல் நீதிமன்ற நடுவர் உத்தரவிடலாம்.

(2) அபராதம், செலவுகள், வரி அல்லது இந்தச் சட்டம் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது விதிகளின் கீழ் ஒரு குற்றவியல் நடுவரால் விதிக்கப்பட்ட அல்லது மதிப்பிடப்பட்ட பிற தொகை, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம், (மத்தியச் சட்டம் 2/1974) இன் கீழ் அத்தகைய குற்றவியல் நடுவரால் வசூலித்தல் வேண்டும், அது அபராதம் என்பது போல், அபராதம் தவிர, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக விண்ணப்பிக்க நகராட்சிக்கு திரும்பப் பெறப்படும்போது செலுத்தப்படும்.”.

97. முதன்மைச் சட்டத்தின் 186 ஆம் பிரிவிற்கு பின்பு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 186-A எனும் பிரிவினை உட்புகுத்துதல்

**“186-A சமரசம் செய்து கொள்ளக்கூடிய குற்றம்.—** (1) இந்தச் சட்டம் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது துணை விதிகளின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் எதுவும், வழக்கு விசாரணையை தொடர்வதற்கு முன்னரோ அல்லது பின்னரோ, ஆணையாளரால் குறிக்கலாகும் அத்தகைய தொகையினை நகராட்சிக்கு வரவு வைப்பதற்காக, அந்த நபரால் செலுத்தப்பட்டதன் பேரில், ஆணையாளரால் சமரசம் செய்து கொள்ளலாம்.

வரம்புரையாக, அந்த தண்டத் தொகையானது, இந்தச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது துணைவிதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு மிகாது இருத்தல் வேண்டும்.

(2) குற்றமொன்று, (1) ஆம் உட்பிரிவின் கீழ் சமரசம் செய்து கொள்ளப்படுமிடத்து, நேர்விற்கேற்ப, நடவடிக்கை அல்லது மேல் நடவடிக்கை எதுவும், சமரசம் செய்து கொள்ளப்பட்ட அத்தகைய குற்றத்தினைப்பொறுத்து, குற்றவாளிக்கு எதிராக தொடரப்படுதலாகாது. மற்றும், குற்றவாளி, காவலில் இருந்தால் உடனே விடுவிக்கப்படுதல் வேண்டும். ”

98. முதன்மைச் சட்டத்தின் 189 ஆம் பிரிவில், 189 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(a) (b) கூறில், இறுதியாக உள்ள “அல்லது” எனும் சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(b) (c) கூறுக்கு பின்பு பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது;—

(d) “நகர சுகாதாரம் அல்லது சுத்திகரிப்பு நிலையம் அல்லது உரம் தயாரிக்கும் மையங்களை செயல்படுத்துதல்; அல்லது

(e) “நகராட்சி நிலங்களில் ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுதல்”

99. முதன்மைச் சட்டத்தின் 194 ஆம் பிரிவில்,— 194 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில், (c) கூறில் “பதிவு தபால்” எனும் சொற்றொடருக்காக, “ பதிவு தபால் அல்லது செய்தித்தாளில் அல்லது வலைதளத்தில் வெளியிடப்பட்ட” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (3) ஆம் உட்பிரிவில், “பதிவு தபால்” எனும் சொற்றொடருக்காக, “பதிவு தபால் அல்லது செய்தித்தாளில் அல்லது வலைதளத்தில் வெளியிடப்பட்ட” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

197 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

100. முதன்மைச் சட்டத்தின் 197 ஆம் பிரிவிற்காக பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது.—

**"197. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.—** (1) 2022 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டத்தினை திருத்தியதன் மூலம், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துகையில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், அரசு, அந்த இடர்ப்பாட்டினை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்தது என அதற்குத் தோன்றுகின்ற இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளை திருத்தப்பட்டவாறான 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்ட வகைமுறைகளுக்கு இணங்கிய வகையிலும் ***தமிழ்நாடு அரசிதழில்*** ஆணை மூலம் வெளியிடுவது வாயிலாக அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரை: ஆனால், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்ட ஒரு கால அளவு முடிவடைந்த பின்னர், அத்தகைய ஆணை எதுவும் செய்யப்படுதல் ஆகாது"

200 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

101. முதன்மைச் சட்டத்தின் 200 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் (j) இனத்திற்கு பின்பு, பின்வரும் இனங்களானவை சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது;—

(k) 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/2008)

(l) 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8/2008)

(m) 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/2008)

(n) 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2008)

(o) 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/2013)

(p) 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/2013)

(q) 2019 ஆம் ஆண்டு ஒசூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/2019)

(r) 2019 ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/2019)

(s) 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/2019)

(t) 2022 ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/2022)

(u) 2022 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/2022)

(v) 2022 ஆம் ஆண்டு சிவகாசி மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/2022)

(w) 2022 ஆம் ஆண்டு கரூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/2022)

(x) 2022 ஆம் ஆண்டு தாம்பரம் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/2022)

(y) 2022 ஆம் ஆண்டு கும்பகோணம் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 6/2022)

(z) 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயல்பாடுகளின் இடைநிறுத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/2000)

(2) (3) ஆம் உட்பிரிவில், "இந்தச் சட்டத்தின் தொடக்கம்" எனும் சொற்றொடருக்காக அது வரும் ஐந்து இடங்களில் "2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**102.** முதன்மைச் சட்டம் முழுவதும், கூறப்பட்ட சட்டத்தின் செயல்பாடுகளின் அளாவுகையானது, 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயல்பாட்டின் இடைநிறுத்தம்) தமிழ்நாடு சட்டம் 33/2000 சட்டத்தினால் இடைநீக்கம் செய்யப்பட்டது. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்தும் மற்றும் அது முதற்கொண்டும் மீண்டும் புத்தாக்கம் பெறுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டத்தின் செயல் பாட்டினை மீண்டும் நடைமுறைப் படுத்துதல்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டம்ச் (தமிழ்நாடு சட்டம் IV/1919), 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920), 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971), 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1981) ஆகிய சட்டங்களானவை மேற்சொன்ன மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்காக இயற்றப்பட்டன. பின்னர், குறிப்பு சட்டங்களான (referential legislation), 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1994), 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1994), 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1994), ஆகியவை இயற்றப்பட்டு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் வகைமுறைகளை தேவையான மாறுதல்களுடன் புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று மாநகராட்சிகளுக்கு பொருந்தப்பட்டது.

2. உடன்பிறந்த சட்டங்களான மேற்சொன்ன மாநகராட்சி சட்டங்கள் மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் V/1920), கிட்டதட்ட 500 பிரிவுகள், ஏழு இணைப்புப் பட்டியல்கள் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட பல எண்ணிக்கையிலான விதிகளைக் கொண்டதாகும். 1997 ஆம் ஆண்டில் அரசு மாநிலத்திலுள்ள பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் அனைத்திற்கும் பொருந்தக்கூடிய பொதுவான சட்டத்தின் தேவை எழுந்துள்ளதை உணர்ந்தது. எனவே, தற்போதுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை நிருவகிக்கும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தினையும் (தமிழ்நாடு சட்டம் V/1920), மாநகராட்சியினை நிருவகிக்கும் சட்டங்களையும் நீக்கறவு செய்து, மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அனைத்திற்கும் பொருந்தக்கூடிய விரிவான சட்டத்தினை இயற்ற அரசானது முடிவு செய்தது.

3. அதற்கிணங்கிய வகையில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை நிருவகிக்கும் தற்போதுள்ள சட்டங்களை நீக்கறவு செய்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமானது இயற்றப்பட்டது. கூறப்பட்ட சட்டத்தின் கீழ், 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் அதிகார விதிகளும் உருவாக்கப்பட்டன மற்றும் கூறப்பட்ட சட்டம் மற்றும் விதிகளானவை 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் தேதியில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

4. எனினும், கூறப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின் வகைமுறைகளை அதன் உண்மையான நடைமுறைப்படுத்தலுக்கு முன்பு ஆய்வு செய்ய கால அவகாசம் கேட்டு, குறித்த சில உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டன. கூறப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகளின் வகைமுறைகளை உள்ளாட்சி அமைப்புகள் ஆய்வு செய்ய மற்றும் தேவைப்பட்டால் அதில் மாற்றங்களை பரிந்துரைக்க மற்றும் அதன் மீதான சந்தேகங்களை அகற்ற கால அவகாசம் அளிக்க அனுமதிப்பதற்காக, அரசானது, 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயல்பாட்டின் இடைநிறுத்த) சட்டத்தின் மூலம் கூறப்பட்ட 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1999) செயல்பாட்டினை இடைநிறுத்தம் செய்தது மற்றும் நீக்கறவு செய்யப்பட்ட மாநகராட்சிச் சட்டங்கள் மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. கூறப்பட்ட 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/1999) மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளானவை இன்றுவரை தொடர்ந்து இடைநிறுத்தத்தில் உள்ளன.

5. தமிழ்நாடு, நமது நாட்டில் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களுள் ஒன்றாகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநிலத்திலுள்ள நகர்ப்புற மக்கள் தொகையின் விழுக்காட்டளவானது 48.45 ஆக உள்ளது. தற்போது நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள் தொகை 53 விழுக்காட்டிற்கு மேல் உயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. விரைவான நகரமயமாக்குதலின் செயல்முறையானது குடிமை சேவைகளை மேலும் மேலும் சிறப்பாக வழங்குவதில் எண்ணற்ற சவால்களை உருவாக்கியுள்ளது. அரசானது, மாநிலத்தின் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்களுக்கு சிறந்த வாழ்வாதாரத்தை அளிப்பதற்காக, இந்த சவால்கள் சிறப்பாக பூர்த்தி செய்யப்படவேண்டுமென அரசானது கருதுகிறது. அத்தகைய சவால்களை பூர்த்தி செய்ய நகராட்சி விவகாரங்களின் தினசரி மேலாண்மைக்கான சிறப்பான அமைப்பின் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக திறனை வலுப்படுத்துதல் முக்கியமாக உள்ளது.

6. எனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு செயல்பாடு, நிதி மற்றும் செயல்பாட்டாளர்களை மாற்றுவதற்கான தொடர்ச்சியான செயல்முறையில் ஈடுபட்டிருப்பதைத் தவிர, நகராட்சி நிர்வாகத்தினை வலுப்படுத்துவதற்கு முக்கியமான சட்டங்கள் மற்றும் நிறுவன ரீதியான தொடக்கத்தின் மூலம் ஒரு செயல்படுத்தும் (enabling) சூழலை வழங்குவதற்கான அவசர மற்றும் கட்டாயத் தேவை உள்ளதென அரசானது கருதுகிறது. இந்தக் குறிக்கோளின் (strategy) ஒரு பகுதியாக மற்றும் மேற்கண்டவாறு

விளக்கப்பட்ட தறுவாயில், குறிப்பாக மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான சட்டத்தின் தேவைகள் மற்றும் நன்மைகளை கருத்தில் கொண்டு அரசானது, 2000 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தத்தில் உள்ள 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 9/1999) மீண்டும் புதிதாக மற்றும் நடைமுறைக்கு மீண்டும் கொண்டுவரப்பட செய்துள்ளது. தமிழ்நாடு சட்டம் 9/1999–ஐ மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவருவதன் பேரில் அனைத்து மாநகராட்சிச் சட்டங்கள், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) மற்றும் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயல்பாட்டினை இடை நிறுத்தம் செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/2000) ஆகியன நீக்கறவு செய்யப்படும்.

7. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்டமுன்வடிவின் 1, (2), 3(k) மற்றும் (l), 15, 25, 27, 28, 45, 46, 47, 51, 53, 54, 56, 58, 59, 60, 62, 73, 80, 84, 89, 90, 91, 93 மற்றும் 100 ஆகிய கூறுகள், அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அறிவிக்கைகளை அல்லது ஆணைகளை வெளியிடுவதற்கோ அல்லது நேர்விற்கேற்ப, விதிகளை செய்வதற்கோ அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 9.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022ஆம் ஆண்டு மே திங்கள் 9ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/2022**

**1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 4/1971.

4ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்டத்தின் 4ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (c) கூறிலுள்ள (iv) மற்றும் (v) ஆம் இனங்களுக்காக, பின்வரும் இனங்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(iv) ஊரக வளர்ச்சி;

(v) நீர் வளங்கள்;".

## நோக்கக் காரண விளக்கவுரை.

அரசானது, 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அலுவல் விதிகளை 2021 ஜூன் 7 ஆம் தேதி முதற்கொண்டு திருத்தம் செய்ததின் படி, பொதுப்பணித் துறையிலிருந்து நீர் வளப் பிரிவினை பிரித்து, 5.1.2022 ஆம் தேதியிட்ட பொதுத்துறை, அரசாணை (நிலை) எண்.13 மூலம் நீர்வளத்துறை என்ற பெயரில் புதிய துறை ஒன்றினை உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது, கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மற்றும் கழிவுநீர் அகற்றல் திட்டங்களை கையாளுவதால், அது, குடிநீர்ப் பயன்பாட்டுக் குழுவிலிருந்து ஒப்புதல் பெறுவதற்காக மற்றும் அதன் திட்டங்களுக்கான தடையின்மைச் சான்றிற்காக நீர்வளத் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் வேண்டும். எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இயக்குநர் குழுமத்தில் பொதுப்பணித் துறையின் இயக்குநரின் இடத்தில், நீர்வளத் துறையின் இயக்குநரானவர் சேர்க்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகின்றது. எனவே, கூறப்பட்ட நோக்கத்திற்காக, 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 4/1971) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 9.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

2022ஆம் ஆண்டு மே திங்கள் 9ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 36/2022**

**1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

136–D ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 136–D ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 136–D ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது, கடன்கள் மற்றும் முதலீடுகள், கடன் கொள்கைகள் மற்றும் பணியாளர் கொள்கை உள்ளடங்கலான அனைத்து நிதி மற்றும் நிர்வாக பொருட்கூறுகளிலும் குறுகிய கால கூட்டுறவு கடன் அமைப்பு சங்கங்களுக்கு தன்னாட்சியினை வழங்குகிறது. குறுகிய கால கூட்டுறவு கடன் அமைப்பு சங்கங்களில் வைப்பீட்டுதாரர்களின் பணத்தைப் பாதுகாப்பதற்கும், இந்த சங்கங்களின் முறையான ஆளுகையினை உறுதி செய்வதற்கும், அதன் மூலம் பொதுநலனைப் பாதுகாப்பதற்கும், முறையான கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு செயல்முறையானது இருத்தல் வேண்டும் என அரசானது தற்போது கருதுகிறது. எனவே, கூறப்பட்ட நோக்கத்திற்காக, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 30/1983ஐ தக்கவாறு திருத்துவதென அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 9.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/2022**

**1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

87ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 87 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவு மற்றும் அதன் உள்ளடங்கலான முதலாம் வரம்புரைக்கு மாற்றாக, பின்வரும் உட்பிரிவு மற்றும் வரம்புரையானது அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:—

“(1) 80 ஆம் பிரிவின் கீழ் தணிக்கையொன்று அல்லது 81 ஆம் பிரிவின் கீழ் விசாரணையொன்று அல்லது 82 ஆம் பிரிவின் கீழ் ஆய்வு அல்லது புலனாய்வு ஒன்று அல்லது 83 ஆம் பிரிவின் கீழ் புத்தகங்களை ஆய்வு மேற்கொள்ளும் அல்லது சங்கம் கலைக்கப்படுமிடத்து, சங்கத்தின் நிர்வாகம் அல்லது மேலாண்மை ஒப்படைக்கப்பட்டிருக்கும் அல்லது ஒப்படைக்கப்பட்டிருந்த நபர் எவரும் அல்லது அந்தச் சங்கத்தின் முன்னாள் அல்லது தற்போதுள்ள அலுவலர் அல்லது பணியாளர் எவரும் அவர் தாமாக அல்லது பிற நபர் எவரின் உடந்தையுடன் பணம் அல்லது பிற சொத்து எதையும் கையாடல் செய்துள்ளார் அல்லது மோசடியாக தக்கவைத்துள்ளார் அல்லது மாற்றம் செய்துள்ளார் அல்லது சங்கம் தொடர்பாக நம்பிக்கைத் துரோகக் குற்றம் செய்துள்ளார் அல்லது நம்பிக்கைத் துரோகம் அல்லது கவனமின்மையினால் சங்கத்தின் சொத்துக்களில் குறைபாடு ஏதும் விளைவித்துள்ளார் அல்லது இந்தச் சட்டம், விதிகள் அல்லது துணை விதிகளுக்கு இணங்கியபடியல்லாத செலுத்தம் எதையும் செய்துள்ளாரெனத் தோன்றினால், பதிவாளர் தாமாகவோ அல்லது இதன் பொருட்டு அவரால் சிறப்பு அதிகாரம் அளிக்கப்பட்ட நபரெவரும் அவரது சொந்த முயற்சியில் அல்லது நிர்வாகச் சபை, கலைப்பு அலுவலர் அல்லது கடன் கொடுத்தவர் அல்லது பங்களித்தவர் எவரேனும் அளித்த விண்ணப்பத்தின் பேரிலோ, அத்தகைய நபர் அல்லது அலுவலர் அல்லது பணியாளர் அல்லது அத்தகைய பிற நபருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தலாம் மற்றும் தொடர்புடைய நபர் மற்றும் அவர் இறந்துவிட்ட நேர்வில் அவரது சொத்தை மரபுரிமையாக பெறுகின்ற அவரது சார்பாளர் அல்லது அவரது சொத்தை வைத்திருக்கும் நபருக்கு, குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க நியாயமான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, பதிவாளர் அல்லது மேற்சொன்னவாறு அதிகாரமளிக்கப்பட்ட நபரானவர், நியாயமெனக் கருதும் அத்தகைய வீதத்தில் வட்டியுடன் அத்தொகை அல்லது சொத்து அல்லது அதன் பகுதி எதனையும் திருப்பிச் செலுத்த அல்லது மீட்டளிக்க அல்லது கையாடல், நிதிகளின் தவறான பயன்பாடு, தொகை அல்லது பிற சொத்தினை மோசடியாக தக்கவைத்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது நம்பிக்கை மோசடி அல்லது கவனமின்மை அல்லது இந்தச் சட்டம், விதிகள் அல்லது துணை விதிகளுக்கு இணங்கியவாறன்றி செய்துள்ள செலுத்தங்கள் பொறுத்த இழப்பீட்டின் மூலம் சங்கத்தின் சொத்துக்களுக்கு அத்தகைய தொகையினை பங்களிக்க அவரைக் கோரி, பதிவாளர் அல்லது மேற்சொன்னவாறு அதிகாரமளிக்கப்பட்ட நபரானவர் நியாயமெனக் கருதும் ஆணை ஒன்றைச் செய்யலாம்.

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட செயல் அல்லது செய்யாமை எதுவும் கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகள் முடிவடைந்த பின்பு இந்த உட்பிரிவின்படி நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது:”.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

நிர்வாகச் சபையின் உறுப்பினர் அல்லது கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் ஒருவர், பணத்தை கையாடல் செய்தல் அல்லது மோசடியாக தக்கவைத்தல் அல்லது சங்கத்தினை பொறுத்து நம்பிக்கைத் துரோகம் செய்தல் அல்லது சங்கத்தின் சொத்துக்களில் வேண்டுமென்றே குறைபாட்டினை விளைவித்தல் போன்றவைகளை செய்தால், அவர் மீது தண்டத்தீர்வை ஆணை வழங்குவதற்கு, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 87 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவானது வகைசெய்கிறது. அதன் கீழுள்ள முதல் வரம்புரையானது, தண்டத்தீர்வை நடவடிக்கை தொடங்குவதற்கு, செயல் அல்லது செய்யாமையின் தேதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கால வரம்பை வழங்குகிறது. 80 ஆம் பிரிவின் கீழ் தணிக்கை, அல்லது 81 ஆம் பிரிவின் கீழ் விசாரணை, அல்லது 82 ஆம் பிரிவின் கீழ் ஆய்வு அல்லது புலனாய்வு, அல்லது 83 ஆம் பிரிவின் கீழ் புத்தகங்கள் ஆய்வு அல்லது சங்கத்தினை கலைத்தல் ஆகியன, 87 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தண்டத்தீர்வை நடவடிக்கை தொடங்குவதற்கான முன்கூட்டி எழும் தேவையாகும். பொதுவாக, ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் கையாடல், மோசடியாக பணத்தைத் தக்கவைத்தல் போன்ற நிகழ்வுகளானவை, பல நேரங்களில் மேற்சொன்ன ஏழு ஆண்டு கால வரம்பு முடிவடைந்த பின்பு பெறப்படலாகும் குற்றச்சாட்டுகள் அல்லது புகாரின் அடிப்படையில் ஆணையிடப்பட்ட மேற்சொன்ன விசாரணை, ஆய்வு அல்லது புலனாய்வின் அறிக்கைகள் மூலம், உரிய அதிகார அமைப்பின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. மேலும், மேற்சொன்ன குற்றச்செயல்களில், சங்கத்தின் நிர்வாகம் அல்லது பணியாளர்களுக்கு உடந்தையாக ஈடுபடும் வெளியாட்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு, கூறப்பட்ட 87 ஆம் பிரிவில் வழிவகை செய்யப்படவில்லை.

2. கூட்டுறவுச் சங்கங்களின் நலனைப் பாதுகாக்கும்பொருட்டு, அத்தகைய மேற்சொன்ன நேர்வுகள் அனைத்திலும் தண்டத்தீர்வை நடவடிக்கையினை தொடங்க வகைசெய்வதற்காக, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983), 87 ஆம் பிரிவினை திருத்தம் செய்வதற்கு அரசானது முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 9.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/2022**

**1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை பகுதி நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலி திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை பகுதி நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலி திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/1982.

15—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை பகுதி நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலி திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தின் 15 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“வரம்புரையாக, தடுப்புக் காவல் சிறைவாசி ஒருவர், அவரது நெருங்கிய உறவினரின் இறப்பு அல்லது இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக, விடுவித்தல் ஆணையை, 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர் ஒருவர், வழங்கலாம்.

விளக்கம்.— இந்த வரம்புரையின் நோக்கத்திற்காக, “நெருங்கிய உறவினர்” என்பது தந்தை, தாய் நேர்விற்கேற்ப, மனைவி அல்லது கணவன், மகன், மகள், உடன் பிறந்த சகோதரர் அல்லது சகோதரி ஆகும்.”.

(2) (2) ஆம் உட்பிரிவில், “மாநில அரசு” என்ற சொற்றொடருக்குப் பின்பு, “ அல்லது நேர்விற்கேற்ப, 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர் ஒருவர்” எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

## நோக்கக் காரண விளக்கவுரை

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை பகுதி நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலி திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) 15ஆம் பிரிவானது, மாநில அரசு, எந்த நேரத்திலும் தடுப்புக் காவல் ஆணைக்கிணங்கி தடுப்புக் காவலிலுள்ள நபரெவரையும், குறிப்பிட்ட கால அளவிற்கு, நிபந்தனைகளின்றி அல்லது அந்த நபர் ஏற்றுக்கொள்ளும் ஆணையில் குறிப்பிடப்பட்ட அத்தகைய நிபந்தனைகளின் பேரில் விடுவிக்கலாம் மற்றும், எந்த நேரத்திலும் அவரது விடுவிப்பினை ரத்து செய்ய வகைசெய்கிறது. தடுப்புக் காவல் சிறைவாசிகள் அல்லது அவர்களது உறவினர் போன்றவரிடமிருந்து அவரது இரத்த சொந்தங்களின் திருமணத்தில் பங்குபெற, தடுப்புக்காவல் சிறைவாசிகளின் உடல்நலமின்மைக்கு சிகிச்சை பெற, நோய்வாய்ப்பட்ட இரத்த சொந்தங்களுடன் இருக்க மற்றும் நெருங்கிய உறவினர்களின் இறப்பு அல்லது இறுதிச்சடங்கில் பங்குபெற மாநில அரசினால் முறையீடுகள் பெறப்பட்டு வருகின்றன. தீவிரமான முயற்சிக்குப் பின்னும், பின்பற்ற வேண்டிய நிருவாக நடைமுறைகள் காரணமாக, அரசு அளவில், முறையீடுகள் உரிய நேரத்தில் தீர்வு செய்ய இயலவில்லை.

2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் வழக்காடு விதிகளின் சீராய்வுக் குழுவானது, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 14/1982—ன் 15ஆம் பிரிவின் வகைமுறைகள், அத்தகைய நிவாரணத்தினை வழங்குவதற்காக மாண்பமை நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் தடுப்புக்காவல் சிறைவாசிகளை அவர்களது நெருங்கிய உறவினர்களின் இறப்பு அல்லது இறுதிச்சடங்கில் உரிய நேரத்தில் பங்குபெறுவதற்கு, கூறப்பட்ட சட்டத்தின் கீழ் தற்காலிகமாக விடுவிக்கும் அதிகாரத்தை செலுத்துதலில் அரசுக்கு ஏற்படும் இடையூறுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டது. கூறப்பட்ட குழுவானது விரிவான விவாதத்திற்கு பின்பு, மற்றவற்றுக்கிடையில் தமிழ்நாடு சட்டம் 14/1982—ன் 15ஆம் பிரிவில் திருத்தத்தினை கொண்டு வருவதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்து, அதன்படி தடுப்புக்காவல் சிறைவாசிகள், அவர்களது நெருங்கிய உறவினர்களின் இறப்பில் கலந்து கொள்வதற்கு தற்காலிகமாக விடுவிப்பினை வழங்குதல் தொடர்பான அதிகாரங்களை மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு ஒன்றிற்கு ஒப்படைவு செய்ய பரிந்துரைத்துள்ளது.

3. அதற்கிணங்கிய வகையில், கூறப்பட்ட பரிந்துரைகளை கவனமாக பரிசீலித்த பின்பு தமிழ்நாடு சட்டம் 14/1982—ல் கூறப்பட்ட நோக்கத்திற்காக திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**V. செந்தில்பாலாஜி,**
*மின்சாரம், மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 9.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

**2022 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/2022**

**1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 37/1987. **2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என சுட்டப்படுவதான) 1987 தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை சட்டத்தின் 10 ஆம் பிரிவில்,— 10—ஆம் பிரிவிற்கானத் திருத்தம்,

(1) (1) ஆம் உட்பிரிவில்,—

(i) "வேந்தர்" எனும் சொற்றொடருக்காக, "அரசு" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அதன் வரம்புரையில், "வேந்தர்" மற்றும் "அவர்" எனும் சொற்றொடர்களுக்காக, முறையே, "அரசு" மற்றும் "அவர்கள்" எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (5) ஆம் உட்பிரிவில், "வேந்தர்" எனும் சொற்றொடருக்காக, "அரசு" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**3.** முதன்மைச் சட்டத்தின், 10—ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"10—A. **துணைவேந்தரை நீக்குதல்.**— இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மேற்கொள்ள மறுத்தல் அல்லது வேண்டுமென்றே செயல்படாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் பிறப்பிக்கப்பட்ட அரசின் ஆணை ஒன்றினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட ஒரு நேர்வில், அரசானது .— 10—A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருக்கும்; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக இருக்கிற அல்லது இருந்துள்ள அத்தகைய நபர் ஒருவரினால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும்.".

## நோக்கக் காரண விளக்கவுரை.

1949 ஆம் ஆண்டு குஜராத் பல்கலைக்கழகச் சட்டம் (சட்ட எண்.50/1949) மற்றும் 1991 ஆம் ஆண்டு தெலுங்கானா பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் (சட்ட எண். 4/1991), பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமிக்க, தொடர்புடைய மாநில அரசானது அதிகாரத்தை கொண்டுள்ளது. 2000–ஆம் ஆண்டு கர்நாடகா மாநில பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (சட்டம் 29/2001), துணை வேந்தரானவர் மாநில அரசின் இசைவுடன் வேந்தரால் நியமிக்கப்படுதல் வேண்டும். மேற்சொன்ன பிற மாநில பல்கலைக்கழக சட்டங்களுக்கு ஏற்ப, சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமிக்க, தமிழ்நாடு அரசுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதப்படுகிறது.

2. எனவே அரசானது, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 37/1987) மேற்சொன்ன நோக்கங்களுக்காக, தக்கவாறு திருத்தம் செய்வது என முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 9.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.